வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 28.12.2023 வியாழக்கிழமை | இதழ் : 362 | பக்கங்கள் : 12

## மேலும் ஒரு டெங்கு மரணம்; அபாயத்தில் யாழ்ப்பாணம்

### அச்சுவேலி இளைஞர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28

டெங்கு காய்ச்சலுக்கு உள்ளான இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழநதார்.

யாழ்ப்பாணம் அச்சுவேலி தோப்பு பகுதியை சேர்ந்த ரவிச்சந்திரன் சாரூரன் (வயது 23) என்ற இளைஞனே உயிரிழந்தார்.

டெங்கு காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர் மூளைச் சாவடைந்திருந்தார்.

தொடர்ந்து இளைஞனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு 11

## சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு வடக்கில் இந்தியா உதவிகள் வழங்கும்

### துணை தூதுவர் ராகேஸ்



யாழ்ப்பாணம், டிசெ. 28

வடக்கில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு இந்தியா உதவிகளை வழங்கும் என யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணை தூதுவர் ராகேஸ் நட்ராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் இந்தியத் துணை தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு 11

## தமிழர்கள் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும்

### கோருகிறார் கஜேந்திரகுமார்



மட்டக்களப்பு, டிசெ. 28

தமிழர்களின் அரசியல் உரிமையை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கு விலைபோயுள்ள தமிழ் தரப்புகள்தான் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என கோரிவருகின்றன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த 11

## இலங்கையில் அமைதி ஏற்பட அரசியல் தீர்வு கட்டாயமானது

### பணி முடித்து திரும்பும் நியூசிலாந்து தூதர் சம்பந்தனை நேரில் சந்தித்துக் கூறினார்



கொழும்பு, டிசெம்பர் 28

"இலங்கையில் அமைதி ஏற்பட - மக்கள் சுதந்திரமாக வாழ அரசியல் தீர்வு கட்டாயம் காணப்பட வேண்டும். இங்கு வாழும் அனைத்து இன மக்களுக்கும் நியூசிலாந்து தொடர்ந்தும் உதவும்."

- இவ்வாறு இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் வலியுறுத்தினார். 11

## ஜப்பானிய நிதியமைச்சர் இலங்கைக்கு வருகிறார்



கொழும்பு, டிசெ. 28

ஆசிய நாடுகளுடனான ஜப்பானின் உறவுகளை வலுப்படுத்தும் முகமாக ஜப்பானிய நிதியமைச்சர் சுனிச்சி சுசூகி இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஜனவரி 9ஆம் திகதி முதல் நான்கு நாள் சுற்றுப்பயணமாக அவர் இலங்கை மற்றும் கம்போடியாவுக்கு செல்லவுள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஏற்பட்டு 70 ஆவது ஆண்டுகள் நிறை 11



திருவாதிரை திருநாளான நேற்று நல்லூர் சிவன் கோவிலில் நடைபெற்ற பூசையின்போது...! படம் - ஐ. சிவசாந்தன்

## தரமற்ற உருளைக்கிழங்கு விதை; விசேடகுழு யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், டிசெ. 28

குப்பிளானில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள உருளைக்கிழங்கு விதைகள் தொற்றுக்கு உள்ளானமை தொடர்பாக ஆராய கொழும்பில் இருந்து விசேட குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளது.

விவசாய அமைச்சு மற்றும் நவீன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் உயரதிகாரிகள் குறித்த குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டு 11

## வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புள்ள நபர் யாழில் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 28

வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவர் கோப்பாய் கொட்டைக்காடு பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றத்தின் மூன்று திறந்த பிடியாணைகள் விடுவிக்கப்பட்ட நிலையில் தலைமறைவாகி இருந்தபோதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயல்படும் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் கோப்பாய் பொலிஸாரும் 11

## கிளிநொச்சி குளத்திலிருந்து குடிதண்ணீர் பெறுவது நிறுத்தம்

### மாற்று வழிகளுக்கு அமைச்சர் பணிப்பு

கிளிநொச்சி, டிசெ. 28

மாசுபடுத்தப்பட்டுள்ள கிளிநொச்சி குளத்திலிருந்து நீர் பெறுவதை தவிர்த்து மாற்று ஏற்பாட்டு முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில், குடிதண்ணீர் தொடர்பான பிரச்னைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன் போதே அமைச்சர் இவ்வாறு 11

## பொது வேட்பாளராக போட்டியிட நான் தயார்

### தயாசிறி ஜயசேகர அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தானும் பொது வேட்பாளராக போட்டியிட தயாராக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இடதுசாரி கட்சிகளுக்கு 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

பல்கலைக்கழகம் ஒன்றில் பேராசிரியராக பணியாற்றிய ஒருவர் ஓய்வுபெற்ற பின்னர் தனது பதவி நிலையை அதாவது பேராசிரியர் என்ற பதவி நிலையை பயன்படுத்துவது சரியானது அல்ல. அவர் வாழ்நாள் பேராசிரியராக இருந்தால் மாத்திரமே பயன்படுத்தலாம். அதாவது வாழ்நாள் பேராசிரியரான நமது பொன். பாலசுந்தரம்பிள்ளை போல...

ஆனால், அப்படியல்லாமல் சிலர் அந்தப் பதவிநிலையை பயன்படுத்தி வருவதை இன்றும் காண்கின்றோம். அதுபோலத்தான் ஓர் உச்ச நீதிமன்றிலோ அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றிலோ நீதிபதியாக இருந்த ஒருவர் தன் வாழ்நாள் முழுவதும் நீதியரசர் என்ற தனது பதவிநிலையை தனது பெயருக்கு முன்னால் போட்டுக் கொள்வதில் தவறில்லை.

நமது நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் அரசியலுக்கு வந்த பின்னரும் தனது பெயருக்கு முன்னால் நீதியரசர் என்ற பதவிநிலையை குறிப்பிட்டு எழுதுவதை பார்த்தபோது, அவர் தன்னை எப்போதும் மற்றவர்கள் மேலே வைத்து பார்க்கவேண்டும் என்பதற்காக அப்படி பயன்படுத்துகிறாரோ என்று கருதியவர்களில் இந்த ஊர்க்குருவியும் ஒருவர்.

ஆனால், அது குறிப்பிடப்படவேண்டிய ஒன்றுதான் என்பதை சிலர் அழுத்திக்கூறியது இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

சட்டக்கல்லூரியிலிருந்து வெளியேறி சுமார் பதினைந்து ஆண்டுகள் சட்டத்துறையில் பணியாற்றிவிட்டு, தன்னுடைய நாற்பதாவது வயதில் நீதிவான் நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றது முதல், மாவட்ட நீதிபதியாக, பின்னர் உயர்நீதிமன்ற நீதிபதியாக, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக, பின்னர் உச்சநீதிமன்ற நீதியரசராக என்று அந்த நீதித்துறையின் உச்சியைத் தொட்டவர் அவர்.

அதாவது இருபத்தி ஐந்து ஆண்டுகள் அவர் நீதித்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பின்னரே, அரசியலுக்கு அழைத்துவரப்பட்டவர். ஒரு நீதிபதி தன்முன்னால் வரும் வழக்குகளை தீர விசாரித்து, தீர்ப்பு எழுதுவது என்பது சாதாரணமான விடயமல்ல. பல குற்றவாளிகள் தமது தரப்பில் ஆஜராகும் சட்டத்தரணிகளின் வாதத்திறமையால் தண்டனையிலிருந்து தப்பிவிடலாம். ஆனால், ஒரு நிரபராதி தண்டிக்கப்படுவது எப்போதாவது நடந்திருக்கலாம். அதற்கான சாத்தியங்கள் மிக அரிதானவையே.

இவைபற்றி எதற்காக இந்த பத்தியில் குறிப்பிடுகின்றோம் என்று நீங்கள் குழப்பமடையலாம்.

அது வேறு ஒன்றுமல்ல, நமது நீதிபதி கடந்த சில நாட்களாக இரண்டு தீர்ப்புகளை வழங்கியிருக்கிறார். அவற்றை நாம் சாதாரணமாக கடந்து செல்லலாமா என்பது தெரியவில்லை.

அவரது முதலாவது தீர்ப்பு: ஜனாதிபதி ரணில் பற்றியது.

‘சிங்களத் தலைவர்களுடன் ஒப்பிடும் போது ரணில் விக்கிரமசிங்க இனவாதம் அற்றவர். ஆனால் அவருடன் பல சந்திப்புகளை மேற்கொண்டேன். 13ஆவது திருத்தம் தொடர்பில் நடைமுறைத் தன்மையை ஆராய்வதற்கு குழு ஒன்றை அமைப்பதற்கு இணங்கினார். ஆறு துறை சார்ந்த நிபுணர்களின் பெயர்களை வழங்கினேன். குழு அமைக்கப்படவில்லை. தற்போது நடைபெற்ற வரவு-செலவுத் திட்டத்தில் அவர் பேசிய கருத்துகள் என்னை வருத்தத்தில் ஆழ்த்தியது.

மாகாண சபையை இல்லாது ஒழித்து மாவட்ட அபிவிருத்திக் குழு ஒன்றின் ஊடாக செயல்பாடுகளை முன்னெடுப்பதற்காக காத்திருக்கிறார். இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.’ என்றார்.

இப்போது இரண்டாவது தீர்பபு ஒன்றை வழங்கியிருக்கிறார்:

‘புதிய அரசியலமைப்பின் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நீக்குவதையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. தமிழர்களின் இனப் பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் தொடர்ச்சியாக தலையீடு செய்துவரும் இந்தியாவை அவ்விடயத்திலிருந்து முழுமையாக களைவதற்கு பெரும்சதிகள் முன்னெடுக்கப்படுகின்றன.’

கடைசியாக நடைபெற்ற தமிழ் எம். பிக்களுடனான சந்திப்பில் நமது தலைவர் சம்பந்தன் புதிய அரசியலமைப்பை வலியுறுத்தி அவருக்கு அதற்கு வழி சமைத்துக் கொடுத்திருக்கிறார். அதாவது புதிய அரசியலமைப்பு சட்டத்தை கொண்டுவந்து இனப்பிரச்னைக்கு தீர்வு காணுமாறு சம்பந்தன் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஜனாதிபதி, புதிய அரசியலமைப்பை அடுத்த பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னர் செய்வதாக உறுதியளித்திருக்கிறார்.

அதாவது புதிய அரசியலமைப்பு திட்டத்தில் 13 இருக்காது. இதைவிட முக்கியமானது, அடுத்த தேர்தலில் ரணில்தான் வெற்றிபெறுவார் என்பதை சம்பந்தன் நம்புகிறார் என்பது.

இதனைத்தான் நமது உலகத் தமிழர் பேரவையும் பௌத்த தேரர்களுடன் இணைந்து கோரியிருக்கின்றது. அதாவது அவர்களும் புதிய அரசியலமைப்பை கோருகின்றார்கள். அதில் பதின்மூன்று இருக்காது.

விக்னேஸ்வரனின் ‘தீர்ப்பும்’ மற்றைய காய்நகர்த்தல்களும் ஒன்றையொன்று சந்திக்கின்றன.!

**- ஊர்க்குருவி.**



நல்லூர் சிவன் கோவில் தேர்த் திருவிழா திருவாதிரை திருநாளான நேற்று புதன்கிழமை காலை மிகவும் பக்தி பூர்வமாக நடைபெற்றது. படங்கள்: ஐ. சிவசாந்தன்

## சபாநாயகரின் மின் கட்டணம் 24 இலட்சம் ரூபாய் பாராளுமன்றத்தின் மின் கட்டணம் 7 கோடி ரூபாய்

கொழும்பு, டிசெ. 28

பாராளுமன்றத்துக்கு மே மாதம் முதல் ஒக்ரோபர் வரையான காலப்பகுதியின் மொத்த மின்சாரக் கட்டணம் 7 கோடியே 31 இலட்சம் ரூபாயாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒக்ரோபர் மாதம் பாராளுமன்ற வளாகத்தின் மின் கட்டணம் ஒரு கோடியே 28 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாயாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கான கடந்த மே மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையான ஆறு மாதங்களுக்கான மொத்த மின்சார கட்டணம் 24 இலட்சம் ரூபாயாகும்.

இதே காலப்பகுதியில் நுவரெலியா மாளிகை வீட்டின் மின்சாரக் கட்டணம் 18 இலட்சம் ரூபாயாக இருந்ததாகக் கூறப்படுகிறது. (அ)

## உருளைக்கிழங்கு உற்பத்திக்கு மானியத்தைப் பெற்றுத் தருக!

### டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 28

வடக்கில் அடுத்த பருவ காலத்தில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையை சுமார் 150 ஹக்ரேயரில் மேற்கொள்வதற்கு 50 வீத மானியத்தைப் பெற்றுத் தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த வருடம் நவீன மயப்படுத்தப்பட்ட மேம்பாட்டு திட்டத்தின் கீழ், வடக்கு விவசாயிகளுக்காக எடுத்துவரப்பட்ட சுமார் 21 ஆயிரம் கிலோ உருளைக் கிழங்கு பயன்படுத்த முடியாத நிலையில் தொடர்பாகவும் இச்சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்நிலையில், சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் குறித்த விடயம் தொடர்பாக அறிக்கை கோரியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் நடைபெறாது எனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பிரான்ஸ் யுவதி விபத்தில் மரணம்

கொழும்பு, டிசெ. 28

கொழும்பு - நெலுவ, லங்காகம வீதியில் கொலந்தொட்டுவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பிரான்ஸ் நாட்டு யுவதி ஒருவர் உயிரிழந்தார்.


இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

நெலுவவிலிருந்து லங்காகம நோக்கிச் சென்ற வான் ஒன்று எதிரே வந்த காருக்கு வழிவிட்டு வீதியில் நிறுத்தப்பட்டதால், கார் அதிவேகமாக வந்து வான் மீது மோதியது.

அங்கு வான் முன்னோக்கி தள்ளப்பட்டு நிறுத்தப்பட்ட போது வானுக்குள் இருந்த வெளிநாட்டு பெண் வெளியே பாய்வதற்கு முற்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பலத்த காயமடைந்த பெண் மருத்துவமனையில் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் 22 வயதுடைய பிரான்ஸ் நாட்டு பிரஜை என தெரியவந்துள்ளது. (அ)






யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மார்கழி திருவாதிரை உற்சவம் இன்றைய தினம் புதன்கிழமை நடைபெற்றது. காலை 6.45 வசந்த மண்டபப் பூசை நடைபெற்று முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராக உள்வீதி, வெளி வீதி வலம் வந்தார். படங்கள்: ஐ.சிவசாந்தன்

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
28.12.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியாவிடம் செல்லுதல்

இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டும் - புதுடில்லியில் 'லொபி'யில் ஈடுபட வேண்டும் என்னும் கருத்து தமிழ் தரப்புகள் மத்தியில் முன்னரை விடவும் அதிகரித்திருக்கின்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தவிர, அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளும் இந்த விடயத்தில் ஒரு கருத்தில் இருகின்றன. தமிழரசு கட்சியின் அடுத்த தலைமைக்கான போட்டியில் ஈடுபட்டுவரும் சிவஞானம் சிறீதரன், தனது கட்சியின் தலைமையின் தவறுகளை ஒப்புக்கொள்கின்றார். அதாவது, 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து சம்பந்தன் முன்னெடுத்த நகர்வுகள் தோல்வியில் முடிவுற்றன எனவும் - வெறுமனே இலங்கையுடன் மட்டும் பேசுவதன் மூலம் பிரச்னைகளை தீர்க்க முடியுமென்று நம்பியது தவறு - இந்தியா விடம் சென்றிருக்க வேண்டும் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

2009இற்கு பின்னரான ஈழத் தமிழர் அரசியல் என்பது அடிப்படை யிலேயே வெளித்தரப்புகள்மீதான எதிர்பார்ப்புகளாகவே நகர்த்தப்பட்டன. ஒரு பலவீனமான சூழலில் அவ்வாறான எதிர்பார்ப்பைத்தான் கொண்டி ருக்கவும் முடியும். ஆனால், அந்த வெளித்தரப்புகளை எவ்வாறு புரிந்து கொள்ளவேண்டும் என்பதில், தெளிவான புரிதல் தமிழர் தரப்புகள் மத்தியில் இருந்திருக்கவில்லை. குறிப்பாக, இலங்கைமீதான மேற்குலக அழுத்தங்களால், மாற்றங்கள் ஏற்படும் என்னும் எதிர்பார்ப்பே மேலோங் கியிருந்தது. ஜெனிவாவுக்கு செல்லுதல் என்பதே பிரதான தேசிய பணியாக இருந்தது.

ஆனால், இவ்வாறு உலகம் சுற்றியதன் மூலம், அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தில் ஒரு சிறிய முன்னேற்றத்தைக்கூட அடைய முடியவில்லை. 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் ஊடாக புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டு வரமுடியுமென்று கூறி காலம் விரயம் செய்யப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தச் சட்டத்தை கையிலெடுப்பதுதான் சரியானது என்று பலராலும் சுட்டிக் காட்டப்பட்ட போதும் சம்பந்தன் தலைமையிலான அணியினர் அதனை கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், அந்த அணியில் இருந்தவரே இன்று, தாங்கள் விடயங்களை சரியாகக் கையாளவில்லை என்பதை ஒப்புக் கொண்டிருக்கின்றார். உலகமெல்லாம் சுற்றிவந்தாலும்கூட இறுதியில் இந்தியாவின் ஆதரவில்லை என்றால், முன்னோக்கிச் செல்ல முடியாது - என்னும் மறந்துபோன உண்மையை ஏற்றுக்கொள்கின்றார்.

2010இலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கும் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் கனடா என்று உலகம் சுற்றுவதை தங்களின் இராஜதந்திர பணியாகக் காண்பித்துக் கொண்டிருந்த சூழலில்தான் 2022இல் அந்த நகர்வில் ஓர் உடைவு ஏற்பட்டது. இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டும் என்னும் உண்மையை அனைவரும் உணரத் தொடங்கினர்.

முன்னாள் விடுதலை இயக்கங்களில் ஒன்றான ரெலோ இதற்கான பிள்ளையார் சுழியை இட்டது. ஆறு தமிழ் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்புவதன் மூலம் இந்தியாவின் உதவி கோரப் பட்டது. யுத்தத்துக்குப் பின்னரான பத்தாண்டுகளில் இந்தியாவை நோக்கி செல்லுதல் என்னும் விடயத்தில் ஏற்பட்ட உடன்பாடு இதுதான். ஆனால், இந்தியாவை நோக்கி எவ்வாறு செல்லவேண்டும் என்பதில் தமிழ் தரப்புகள் இன்னும் தெளிவைப் பெற வேண்டியிருக்கின்றது.

இந்தியா ஒன்றுதான் ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வலியுறுத்திவரும் ஒரேயொரு நாடு. அதன் அடிபபடையாக இந்திய - இலங்கை ஒப்பந்ததத்தின் விளைவான 13ஆவது திருத்தச்சட்டமே இருக்கின்றது. 13ஆவது திருத்தச்சட்டம் என்பது கருங்கல் பாறையல்ல - அதிலிருந்து முன்னோக்கி நகரமுடியும். ஆனால், முதலில் இருப்பதை உச்சபட்சமாகப் பயன்படுத்திக் கொண்டுதான் நகரமுடியும். இன்றைய சூழலில்தான் அதற்கான உதவியைத்தான் இந்தியாவிடம் எதிர்பார்க்க முடியும்.

அதேவேளை இந்தியாவின் நலன்கள் தொடர்பிலும் விசுவாசமும் பற்றும் கொண்ட தரப்பாகவும் தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களை அடையா ளப்படுத்த வேண்டும்.

# நாடளாவிய ரீதியில் மின் தடை; தவறை ஏற்றது மின்சார சபை

கொழும்பு, டிசெ. 28

நாடளாவிய ரீதியில் அண்மையில் ஏற்படுத்தப் பட்ட மின்சார விநியோகத் தடை தொடர்பில் இலங்கை மின்சார சபை தவறை ஏற்றுக்கொண் டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாதாந்த சபை அமர்வில் இந்த விடயம் தொடர்பில் கருத்துரைக் கையிலே பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் எம். ஏ.ஆர்.எம் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் கடந்த 9 ஆம் திகதி மின் விநியோகத் தடை ஏற்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், மின்சார பாவனையாளர் களுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடு செய்வது தொடர்பில் எதிர்வரும் ஆணைக்குழுவின் கூட் டத்தில் தீர்மானிக்கப் படும் என பொதுப்பயன் பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (அ)

# ஒரு வருட காலமாக வேதனம் இன்றி பணியாற்றும் 350 இலங்கையர்கள்!

கொழும்பு, டிசெ. 28

வெவ்வேறு மாகாணங் களில் இருந்து ஜோர்தா னின் சஹப் பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு தொழிலுக்கு சென்ற சுமார் 350 இலங்கையர்கள் ஒரு வருட காலமாக வேதனம் இன்றி பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக தங்களை உடனடி யாக நாட்டுக்கு அழைத்து செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த தரப்பினர் சுமார் 6 வருடங்களாக அங்கு பணியாற்றி வந்துள்ளனர்.

எனினும், தற்போது குறித்த ஆடை தொழிற் சாலை மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் உணவு மற்றும் தங்குமிட வசதி யின்றி தாங்கள் அசௌகரி யங்களை எதிர்நோக்கி வருவதாக அங்குள்ள இலங்கையர்கள் சிலர் தெரிவித்தனர். (அ)

# செங்கடலில் கப்பல்களின் கட்டணம் அதிகரிப்பு; இலங்கை ஏற்றுமதியாளர்களும் கடும் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 28

மத்திய கிழக்கின் செங்கடல் பிராந்தியத்தில் யேமனின் ஹவுதி போராளி களின் தாக்குதல்கள் காரணமாக அந்த கடல் வழியாக பயணிக்கும் வணிக கப்பல்கள் தமது கட்டணங்களை 300 வீதமாக அதிகரித்துள்ள தாகவும் இது இலங்கையின் ஏற்றுமதியாளர்களை கடுமையாக பாதிக்கக்கூடும் எனவும் ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நிலவும் நிலைமையின் அடிப்படையில் இலங்கை யில் இருந்து செங்கடல் வழியாக ஏற்றுமதி செய்யப் படும் 20 அடி கொள்கலன் பெட்டிகளுக்கு தற்போது அறவிடப்படும் 600 அமெரிக்க டொலர்கள் ஆயிரத்து 500 டொலர்க ளாக அதிகரிக்கலாம் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

யேமனில் இயங்கி வரும் ஹவுதி போராளிகள் இஸ்ரேலை இலக்கு வைத்து செங்கடலில் பயணிக்கும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதே இந்த நிலைமைக்கு காரணம்.


இந்த நிலையில், ஹவுதி போராளிகள் அண்மையில் வணிக கப்பல் ஒன்றை தமது கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தனர்.

இதன் காரணமாக சில கப்பல் நிறுவனங்கள் செங்க டல் வழியாக பயணிப்ப தற்கு பதிலாக மாற்று வழி யில் பயணம் செய்வது குறித்து கவனம் செலுத்தி யுள்ளன.

செங்கடலில் பெம் எல். மென்டேப் பகுதிக்கு அருகில் நடக்கும் இந்த தாக்குதல்கள் காரணமாக கப்பல்களில் பொருட்களை கொண்டு செல்லும் 20 அடி கொள்கலன் பெட்டிகளுக் கான கட்டம் இந்த மாதம் ஆயிரத்து 500 டொலர்க ளாக அதிகரிக்கப்பட் டுள்ளது.

செங்கடலுக்கு பதிலாக மாற்று வழியில் கப்பல்கள் பயணித்தால் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு மேலும் அதிகளவான கட்டணங்களை செலுத்த நேரிடும் எனவும் ஏற்று மதியாளர்கள் கூறியுள்ளனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களின் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். முயற்சியால் முன்னேறுவீர்.

**இடபம்**
கடந்த 2 நாட்களாக இருந்த அலைச்சல், டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**சிம்மம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். லாபம் பெருகும்.

**கன்னி**
அனுபவ பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்துவேலை வாங்குவீர்கள். மரியாதைக் கூடும். சாதிக்கும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உங்களை மதித்துப் பேசுவார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். மேலதிகாரி குறை கூறுவார்.

**தனுசு**
உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
பிள்ளைகளின் உயர்கல்வி, உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

# சமூகநீதி, சமத்துவம் கொண்ட தமிழகத்தை உருவாக்குவோம்!

## முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை, டிசெ. 28

“பெரியார், அம்பேத்கர், அண்ணா, கருணாநிதி ஆகியோர் காட்டிய சமூக நீதிப் பாதையில் திராவிட மொடல் ஆட்சியை நாம் நடத்திக் கொண்டு வருகிறோம். சமூக நீதி, சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவம் ஆகிய மானுட நெறிகளின்படி தமிழகத்தை உருவாக்கத்தான் என்னை நான் ஒப்படைத்து உழைத்துக் கொண்டு வருகிறேன்” என்று ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் நடந்த விழாவில் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் பேசியுள்ளார்.

எல்லோருக்கும் எல்லாம் என்பதை நிர்வாக நெறியாக கொண்டு திட்டங்களை தீட்டி வருகிறோம். அந்த அடிப்படையில், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள், சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் உயர்த்தி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி மேம்படுத்த தனிக்கவனம் செலுத்தி பல்வேறு நலத்திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகிறோம்.

அம்பேத்கரின் கனவான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகள் நிறைந்த, சமூக நீதியின் அடிப்படையிலான ஒரு சமத்துவ சமுதாயமாக தமிழகத்தை உருமாற்றும் வகையில் நம்முடைய விழிப்புணர்வுப் பயணத்தை தொய்வின்றித் தொடருவோம்” என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.



(ஐ)

# தமிழ்நாட்டில் கோவிட் தொற்றின் ஜே. என். 1 உபபிறழ்வு பரவுகிறது!

சென்னை, டிசெ. 28

தமிழகத்தில் மதுரை, திருச்சி, கோவை, திருவள்ளூர் ஆகிய 4 மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு புது வகை கொரோனாவான ‘ஜே.என்.1’ உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஜே.என்.1 என்ற புதிய வகை கொரோனா வைரஸ் தற்போது வேகமாக பரவி வருகிறது. தமிழகத்தில் நான்கு பேருக்கு கண்டறியப்பட்டுள்ளதாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட நிலையில், அந்த 4 பேரின் சளி மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, புனே பகுப்பாய்வு மையத்திற்கு அனுப்பப்பட்டன. அதில், 4 பேருக்கும் புது வகை கொரோனா பாதிப்பு உறுதியாகியுள்ளது. அந்த 4 பேரும் மதுரை, திருச்சி, கோவை, திருவளளூர் என வெவ்வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வகை கொரோனா வீரியம் குறைந்தது எனவும், மக்கள் அச்சப்பட தேவையில்லை எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

# ஓ. பி. எஸ். விரைவில் சிறை செல்வார்

## எடப்பாடி பழனிசாமி



கோவை, டிசெ. 28

பன்னீர்செல்வம் விரைவில் சிறைக்கு செல்வார் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கோவையில் அவர் நேற்று செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

தென்மாவட்டங்களில் கன மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் முன்பே கணித்துச் சொன்னது. அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருந்தால் பாதிப்பை தவிர்த்திருக்கலாம். கால்வாய்களை முன்பே தூர்வாரி மோட்டார்களை தயாராக வைத்திருக்க வேண்டும். அ. தி. மு. க. ஆட்சியில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாநில அரசு முதலில் மாநில பேரிடர் நிவாரண நிதியின் மூலம் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மத்திய அரசு நிதி கொடுக்க தவறிவிட்டது. மத்திய, மாநில அரசுகள் ஒருவரை ஒருவர் குறை சொல்வதை விட்டுவிட்டு மக்களுக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும்.தேர்தல் கூட்டணி அரசியல் சூழல்களுக்கு ஏற்ப முடிவு செய்யப்படும்.

ஓ. பி. எஸ். (ஓ. பழனிசாமி) மீதான வழக்கு விரைவில் விசாரணைக்கு வர உள்ளது, அதில் அவருக்கு நிச்சயம் தண்டனை கிடைக்கும். விரைவில் ஓ. பி. எஸ். சிறைக்கு செல்வார். சில இரகசியங்களை வெளியிட்டால், எடப்பாடி பழனிசாமி சிறை செல்ல நேரிடும் என பன்னீர்செல்வம் தெரிவித்திருந்த நிலையில் எடப்பாடி பழனிசாமி இவ்வாறு கூறியுள்ளார்.

# இலங்கை செல்லவிருந்த விமானம் ரத்து சென்னை விமான நிலையத்தில் குழப்பம்

சென்னை, டிசெ. 28

சென்னை மீனம்பாக்கம் அண்ணா பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து நேற்று காலை 9:40 மணிக்கு இலங்கை தலைநகர் கொழும்புக்கு சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் செல்ல 186 பயணிகள் இருந்தனர். இந்த விமானம் வழக்கமாக இலங்கையில் இருந்து காலை 8:40 மணிக்கு சென்னை வந்து விட்டு மீண்டும் இலங்கை புறப்பட்டு செல்லும்.

இலங்கையில் நிலவிய மோசமான வானிலை காரணமாக நேற்று சென்னை விமான நிலையத்துக்கு வர வேண்டிய இலங்கை விமானம் வந்து சேரவில்லை. இதனால் சென்னையில் இருந்து இலங்கை செல்ல வேண்டிய விமானமும் இரத்து என அறிவிக்கப்பட்டது. இதனால் விமானத்தில் பயணிக்க தயாராக இருந்த 186 பயணிகள் அதிருப்தி அடைந்தனர். இந்த விமானம் மூலம் சுமார் 40இற்கும் மேற்பட்ட பயணிகள் இலங்கை வழியாக சிங்கப்பூர், மலேசியா அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு செல்ல இருந்தனர்.

இந்த நிலையில், விமானம் இரத்து என்று அறிவிக்கப்பட்டதால் இலங்கை செல்ல இருந்த பயணிகளும், இலங்கையில் இருந்து பிற நாடுகளுக்கு செல்ல வேண்டிய பயணிகளும் விமான நிறுவன ஊழியர்களை சூழ்ந்து கொண்டு முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

(ஐ)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடார் ரணில்!

## கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, டிசெ. 28

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.**



கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 16 மற்றும் ஒக்ரோபர் 16 ஆம் திகதிகளுக்கு இடையில் நடைபெறும், ஆனால் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக களமிறங்கமாட்டார்.

இதற்கு முன்னர் இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தோல்வியை சந்தித்த அவர் 2016 இல், மற்றொரு இழப்பை எதிர்பார்த்து, பொது வேட்பாளரை பரிந்துரைத்தார். அந்த வெற்றியில் ஆட்சியைப் பிடித்தார்.

எவ்வாறாயினும் இந்த முறை அவர் அதிஷ்டத்தால் மட்டுமே ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். பொதுஜன பெரமுன ஒரு போதும் அவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்காது.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக தம்மிக்க பெரேரா தெரிவு செய்யப்பட்ட நிலையில், ரணில் விக்கிரமசிங்கவிற்கு எந்த கட்சியுடன் கீழ் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட முயற்சித்தாலும் நிச்சயம் தோல்வியை சந்திக்க நேரிடும். நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு இளைஞர்கள் ரணில் விக்கிரமசிங்க போன்ற வயதான அரசியல்வாதிகளுக்கு வாக்களிக்க மாட்டார்கள். 65 வயதிற்குட்பட்ட புதிய ஜனாதிபதியை நாடு தெரிவு செய்யும்.

வாழ்க்கைச் செலவினங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் பொதுமக்கள் போராடி வருகின்றனர். ஆண்டின் தொடக்கத்தில் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

மக்கள் இதைச் செய்யும் போது அதிகாரத்தில் இருப்பவர்கள் சட்டவிரோத உத்தரவுகளை வழங்குவார்கள்.

ஆனால் அவற்றைச் செயல்படுத்த கூடாது. தற்போதைய ஜனாதிபதி ஓய்வு பெறும்போது பாதுகாப்பாக இருப்பார்,

அதே நேரத்தில் உத்தரவை நிறைவேற்றியவர்கள் சட்டரீதியான பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும்-என்றார். (அ)





# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மார்கழி திருவாதிரை உற்சவம்!

யாழ்ப்பாணம், டிசெ. 28

நல்லூர் கந்தசுவாமி ஆலய மார்கழி திருவாதிரை உற்சவம் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது.

காலை 6.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராக உள்வீதி வலம் வந்ததைத் தொடர்ந்து காலை 7.15 மணிக்கு வெளி வீதியில் எழுந்தருளினார். (அ)

# அரச ஊழியர்களுக்கு விசேட விடுமுறைகள்

கொழும்பு, டிசெ. 28

நாட்டில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக பணிக்கு சமூகமளிக்க முடியாத அரச ஊழியர்களின் வேலை நாட்களை விசேட விடுமுறை தினங்களாக பதிவு செய்ய பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக பணிக்கு சமூகமளிக்க முடியாத அரச ஊழியர்களுக்கு மட்டுமே இந்த சலுகை செல்லுபடியாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் விசேட விடுமுறைகள், விடுப்புப் பதிவேட்டில் முறையாகப் பதியப்படவேண்டும் என அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட விடுமுறையைப் பெற்றுக்கொள்வதற்கு கடமைக்கு சமூகமளிக்க முடியாததற்கான காரணத்தைக் குறிப்பிட்டு கடிதம் ஒன்றினை பிரதேச செயலாளர் மற்றும் கிராம அலுவலரின் கையொப்பத்துடன் திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், திணைக்கள தலைவர் கடிதத்தை சரிபார்த்து, அவற்றினை விசாரித்த பின்னரே இந்த விசேட விடுமுறை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நத்தார் ஆராதனைக்காக ஆலயம் சென்ற வர்த்தகரின் வீடு உடைப்பு

## ரூ. 70 லட்சம் பெறுமதியான நகை பணம் திருட்டு

கொழும்பு, டிசெ. 28

புத்தளம், உடப்பு - பூனைப்பிட்டி பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரது வீடொன்றில் இருந்து 70 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் என்பன கடந்த 25ஆம் திகதி அதிகாலை திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தங்க நகைகள் மற்றும் பணம் என் பன திருடப்பட்ட சமயத்தில் வீட்டில் எவரும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேங்காய் மற்றும் இறால் விற்பனையில் ஈடுபட்டுவரும் அந்த பிரதேசத்தின் வியாபாரியின் வீட்டிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது என்று உடப்பு பொலிஸார் குறிப்பிட்டனர்.

அந்த வர்த்தகர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் இரவு வட்டவான் பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் நடைபெற்ற நள்ளிரவு நத்தார் ஆராதனை நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்று விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் கடந்த 25 ஆம் திகதி அதிகாலை மீண்டும் வீட்டுக்கு வருகை தந்து பார்த்து போது, வீட்டில் உள்ள பொருள்கள் அங்கும், இங்குமாக வீசப்பட்டிந்துள்ளன. வீட்டில் இருந்த தங்க நகைகள் மற்றும் பணம் என்பனவும் திருட்டுப் போயிருந்தன. இது பற்றி வீட்டின் உரிமையாளரான வர்த்தகர் பொலிஸ் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற உடப்பு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தம்மிக குலதுங்க தலைமையிலான பொலிஸ் குழுவினரும், பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் அங்கு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தங்க நகைகள் மற்றும் பணம் என்பன திருட்டுப் போயிருந்த வீட்டின் ஜன்னல் உடைக்கப்பட்டுள்ளது. இதனூடாக உள்ளே சென்ற திருடர்கள் திருட்டில் ஈடுபட்டிருப்பது மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# வைத்திய ஆலோசனையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பயன்படுத்த வேண்டாம்!

## சுகாதாரத்துறையினர் மக்களிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 28

நாட்டில் தற்போது வேகமாக பரவிவரும் வைரஸ் தொற்றுக்களுக்கு, வைத்திய ஆலோசனையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளை பயன்படுத்த வேண்டாம் என சுகாதாரத்துறையினர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலைக் காரணமாக பல பிரதேசங்களில் தற்போது இன்புளுவன்சா உள்ளிட்ட வைரஸ் தொற்றுக்கள் வேகமாக பரவி வருகின்றன.

இந்த நிலையில், வைத்திய ஆலோசனையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளை பயன்படுத்த வேண்டாம் என சுகாதாரத் துறையினர் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் நந்தன திக்மதுகொட, நீண்ட நாட்களாக காய்ச்சல் நிலவுமாயின் உடனடியாக அரச வைத்தியசாலைக்கு சென்று வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

அவ்வாறான வைரஸ் தொற்றுகள் காற்றின் மூலம் வேகமாகப் பரவுவதால், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும், நோயிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முகக்கவசத்தை அணியுமாறும் விசேட வைத்திய நிபுணர் நந்தன திக்மதுகொட தெரிவித்தார்.

(அ)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களுக்கு 10 கேள்விகள்!

## பொதுஜன பெரமுன தயாரித்துள்ளது

கொழும்பு, டிசெ. 28

**பொதுஜன பெரமுனவின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களுக்கு கட்சி பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த பத்து கேள்விகள் அடங்கிய கேள்விக்கொத்தினை தயாரித்துள்ளது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

பொதுஜன பெரமுன முன் வைத்துள்ள நிபந்தனைகளை கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என குறிப்பிட்டுள்ள அந்த ஊடகம், இதுவரை தம்மிக்க பெரேரா குறித்த ஊகங்களே வெளியாகியுள்ளன. எனினும் வேறு சில வேட்பாளர்கள் குறித்து ஆராய்வதாக கட்சியின் பொதுச்செயலாளர் கடந்த வாரம் தெரிவித்துள்ளார் எனவும் செய்தி வெளியிட்டுள்ளது.

பத்து கேள்விகளுக்கான பதில்களை அடிப்படையாக வைத்து வேட்பாளரை கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்வார் என தெரிவித்துள்ள அந்த ஊடகம், இந்த பத்து நிபந்தனைகள் அல்லது கேள்விகள் அரசியல் கூட்டணிகளை உருவாக்குவதற்கான அவர்களின் திறன் மற்றும் தேர்தலில் அதிக ஆதரவை பெறுவதற்கான திறன் குறித்ததாகவும் காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளது.

வற் வரியை குறைப்பதற்கான திட்டங்கள் அரசாங்கத்தின் வருமானத்தினை அதிகரிப்பதற்கான மாற்று திட்டங்கள், 7 வீத பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள், நல்லாட்சிக்கான திட்டங்கள் குறித்த கேள்விகளையும் பொதுஜன பெரமுன தயாரித்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# ஐஸ் பாவித்து விட்டு கடமையாற்றிய பொலிஸ்காரர் பணி இடைநிறுத்தம்!

கொழும்பு, டிசெ. 28

ஐஸ் போதைப்பொருள் பாவித்துவிட்டு கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சேவையை இடைநிறுத்த புத்தளம் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பல்லம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 17ஆம் திகதி நண்பகல் 12.00 மணியளவில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரின் அசாதாரண நடத்தை காரணமாக பல்லம பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரை வரவழைத்து வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்பி வைத்தனர்.

சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை கிடைக்கப் பெறும் வரை குறித்த உத்தியோகத்தரை முந்தல் பொலிஸ் நிலையத்துக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்வதற்கும் புத்தளம் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏற்பாடு செய்தார். புத்தளம் சட்ட வைத்திய அதிகாரி கடந்த 24ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில், தான் பரிசோதித்த பொலிஸ் உத்தியோகத்தரின் இரத்தத்தில் மெத்தம்பெட்டமைன் அல்லது ஐஸ் போதைப்பொருள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை ஆய்வு செய்த புத்தளம் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், கடமையின் போது போதைப்பொருள் பாவித்த குற்றச்சாட்டின் கீழ் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளின் சேவையை கடந்த 26 ஆம் திகதி முதல் இடைநிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளார். (அ)



# யாழ். பல்கலை கிளிநொச்சி வளாகத்தில் மருத்துவ முகாம்

கிளிநொச்சி, டிசெ. 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் உள்ள பௌத்த விகாரையில் மலேசிய வைத்தியர்களின் ஆலோசனையில் மருத்துவ முகாம் நேற்று இடம்பெற்றது.

மலேசியாவிலிருந்து வருகை தந்த வைத்தியர் குழுவினரின் வைத்திய ஆலோசனையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டதுடன், இதில் அக்குபஞ்சர் சிகிச்சையும் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பௌத்த விகாரை மற்றும் களனி நாகாநந்தா சர்வதேச பௌத்த பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து குறித்த வைத்திய முகாமை ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது 500 பேருக்கான மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சையும், 200 பேருக்கான உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இன மற்றும் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த முகாமில், பொன்னகர், மலையாளபுரம், அறிவியல் நகர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மக்கள் பயன் பெற்றுள்ளனர். (அ)

# யாழ். பல்கலைக்கழக மாணவி உயிரிழப்பு; அறிக்கை கோரும் சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 28

யாழ்.பல்கலைக்கழக மாணவியின் மரணம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குறித்த மாணவி, மருந்தின் ஒவ்வாமை காரணமாக உயிரிழந்துள்ள நிலையில், அவரது மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக, மாணவியின் உறவினர்களால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த முறைப்பாட்டில் அந்த மாணவிக்கு எவ்விதமான ஒவ்வாமையும் இல்லை எனவும் செலுத்தப்பட்ட ஊசி மருந்து என்னவென்பது தமக்கு தெரிவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையிலேயே குறித்த மாணவியின் மரண அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

# உயரழுத்த மின்மார்க்கத்தில் பட்டம் சிக்கி பருத்தித்துறையில் மின்சாரம் துண்டிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 28

உயரழுத்த மின்மார்க்கத்தில் பட்டம் சிக்கி எரிந்ததால் வடமராட்சி, பருத்தித்துறை பிரதேசத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

நேற்றுக் காலை மந்திகை பகுதியில் பட்டம் ஏற்றியபோது இந்த விபரீதம் நிகழ்ந்தது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள மக்கள் வங்கி கிளைக்கு அருகில் இந்த விபத்து நிகழ்ந்தது. பட்டம் ஏற்றியபோது, அது உயரழுத்த மின்மார்க்கத்தில் சிக்கி, தீப்பற்றியது. இதனால் பருத்தித்துறை பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

பின்னர், மின்சாரசபை ஊழியர்களால் பட்டத்தை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (அ)

# இணையவழி பயணிகள் இருக்கை முன்பதிவு சேவைக்காக 200 பஸ்கள்

கொழும்பு, டிசெ. 28

இலங்கை போக்குவரத்துச் சபையின் இணையவழி பயணிகள் இருக்கை முன்பதிவு சேவைக்காக அடுத்த வருடம் 200 சொகுசு பஸ்கள் இணைக்கப்படும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.

sltb.eseat.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக ஒரு வருடத்திற்கும் மேலாக நடத்தப்பட்டு வந்த இணையவழி பயணிகள் இருக்கை முன்பதிவுச் சேவை மிகவும் வெற்றியடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஏறக்குறைய 80,000 பயணிகள் இருக்கைகள் முன்பதிவு செய்யப்பட்டு கிட்டத்தட்ட மூன்றரை கோடி ரூபா வருமானம் நேரடியாக ஈட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த கிறிஸ்மஸ் விடுமுறை வார இறுதி நாட்களில் இந்த இருக்கை முன்பதிவு சேவைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# நுவரெலியா தபால் நிலையத்துக்கு மூன்று கட்டடங்கள் முன்மொழிவு

නාගරික සංවර්ධන අධිකාරිය
நகர அபிவிருத்தி அதிகாரசபை
Urban Development Authority

கொழும்பு, டிசெ. 28

நுவரெலியா தபால் நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு பொருத்தமான 3 கட்டடங்கள் தபால் திணைக்களத்திற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள கட்டடங்களை ஆய்வு செய்ததன் பின்னர், தபால் திணைக்களத்தின் விருப்பத்திற்கு அமைய அங்கு தபால் நிலையத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

நுவரெலியா தபால் நிலையம் அமைந்துள்ள பழைய கட்டடத்தை எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் முதலீட்டு செயற்றிட்டத்திற்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக சபை தெரிவித்துள்ளது.

தொல்பொருள் நினைவுச் சின்னமாக கருதப்படும் நுவரெலியா தபால் நிலையம் விற்பனை செய்யப்படுவதற்கு எதிராக அண்மையில் தபால் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்புகளை முன்னெடுத்திருந்தனர்.

எனினும், அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் இதுவரை பதில் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# 95 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு குடிதண்ணீர் விநியோகம் துண்டிப்பு!

கொழும்பு, டிசெ. 28

95,000 க்கும் மேற்பட்டோருக்கு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் வரை நீர் கட்டணம் செலுத்தாதவர்களுக்கே இவ்வாறு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதியுடன் துண்டிக்கப்பட்ட குடிதண்ணீர் இணைப்புகளின் எண்ணிக்கை 95,241 எனவும், சுமார் 12.97 பில்லியன் ரூபாய் நிலுவைத் தொகையை மக்களிடம் இருந்து வசூலிக்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொருளாதார நெருக்கடியின் பாதிப்பு தொடர்ந்தும் நீடிப்பு!

## கடன் பிடியில் 54 வீதமான குடும்பங்கள்

கொழும்பு, டிசெ. 28

**கடந்த வருட பொருளாதார நெருக்கடி குடும்பங்களின் மீது தொடர்ந்தும் ஏற்படுத்தி வரும் பொருளாதார தாக்கம் குறித்த உத்தியோகபூர்வ ஆய்வுகள் வெளியாகியுள்ளன.**

சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் இந்த ஆய்வினை முன்னெடுத்து அது குறித்து விவரங்களை பகிரங்கப்படுத்தியுள்ளது.

இந்த ஆய்வு பொருளாதார நெருக்கடியால் கல்வித்துறை எதிர்கொண்டுள்ள பாதிப்புகள் வேலைவாய்ப்பு தனிநபர் வருமானத்தின் மீதான தாக்கம் குடும்பங்களின் வருமானம் மற்றும் செலவுகள் மீதான தாக்கம் - குடும்பங்கள் அவற்றை எவ்வாறு எதிர்கொள்கின்றன சுகாதாரத்தின் மீதான தாக்கம் உட்பட பல விடயங்கள் குறித்து ஆராய்ந்துள்ளது.

குடும்பங்களின் நிதி நிலைமைகளில் பொருளாதாரநெருக்கடி கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை இந்த பொருளாதார ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

வருமானத்திலும் செலவுகளிலும் பொருளாதார நெருக்கடி கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனதெரிவித்துள்ள ஆய்வு இந்த நெருக்கடி குடும்பங்கள் எவ்வாறு நிதியைகையாள்கின்றன என்பதில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

பல பொருளாதார காரணங்களால் பல குடும்பங்களின் வருமானங்கள் குறைவடைந்துள்ளது இதன் காரணமாக அவர்கள் தங்களிடமுள்ள பணத்தை செலவிடும் முறையும் மாற்றமடைந்துள்ளது எனவும் சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடும்பங்களின் வருமானம் மற்றும் செலவீனங்களில் பொருளாதார நெருக்கடி கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது அதன் காரணமாக குடும்பங்கள் மூலோபாய மாற்றங்களை மேற்கொள்ளவேண்டிய நிலையிலும் சவாலான தருணங்களில் தங்களின் நிதி நெருக்கடியை சமாளிப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றவேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளன என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக 60 வீதமான குடும்பங்களின் வருமானம் குறைவடைந்துள்ளமை ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

மேலும் 54.9 வீதமான குடும்பங்கள் இன்னமும் கடனின் பிடியில் சிக்குண்டுள்ளன, இது இலங்கையின் குடும்பங்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவை ஏதாவதொரு நிதி கடப்பாட்டில் அல்லது வறுமையில் சிக்குண்டிருக்கின்றன என்பதும் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

(அ)

# குடிசைகளில் வாழும் மக்களுக்கு புதிய வீடுகள் வழங்க நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 28

கொழும்பில் உள்ள குடிசைப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு புதிய வீடுகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பில் உள்ள 26 தோட்டங்களில் 61,000 இற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர்.

இம்மக்களுக்கு வீடுகள் வழங்குவதற்கான புதிய யோசனை அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன் அடிப்படையில் குறித்த மக்களை குடியமர்த்திய பின்னர் எஞ்சியுள்ள இடங்களை முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுத் திட்டங்களுக்காக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார்.

(அ)

# இறக்குமதி செய்த மருந்துகளை விடுவிக்க விசேட குழு நியமனம்

கொழும்பு, டிசெ. 28

இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளை துறைமுகத்தில் இருந்து விடுவிப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முதல் குறித்த குழு செயற்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர், விசேட வைத்தியர் பாலித மஹீபால தெரிவித்தார்.

இதனிடையே, பதிவு செய்வதற்கான கால எல்லையைக் கடந்துள்ள மருந்துகளுக்கான காலத்தை எதிர்வரும் ஜூன் மாத இறுதி வரை நீடித்துள்ளதாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

(அ)

# பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு உள்ளிட்ட இடங்களில் கொள்ளை!

## 7 பேர் கைது; நகைகள் மீட்பு!!

யாழ்ப்பாணம், டிசெ. 28

வல்வெட்டித்துறையில் வசிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வீடு உள்ளிட்ட சில இடங்களில் இடம்பெற்ற களவுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் உள்ளிட்ட 7 பேர் பொலிஸாரால், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து 16 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 பேர், மன்னாரைச் சேர்ந்த 2 பேர் மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் என 7 பேரே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி வல்வெட்டித்துறைப் பகுதியில் வசிக்கும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரின் வீட்டில் நடந்த திருட்டுச் சம்பவத்தில் ஐந்தரை இலட்சம் ரூபாய் பணமும் 16 பவுண் நகைகளும் திருடப்பட்டுள்ளன.

அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 19 வயதான-போதைக்கு அடிமையான இளைஞன் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், நகை அடகு வைத்தவர், நகையை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டுக்களின் கீழ் பெண் உள்ளிட்ட ஏனையோர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# யாழ்ப்பாணத்தில் டெங்குக்கு முடிவு கட்ட சகலரும் பொறுப்புடன் செயற்படவேண்டும்

## அரச அதிபர் சிவபாலசுந்தரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 28

யாழ். மாவட்டத்தில் அதிகரிக்கும் டெங்கு நோய் தாக்கத்தைப் பார்க்கின்றபோது மிக வேதனையாக இருக்கின்றது என்று தெரிவித்த மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், இதனைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 19 ஆவது தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனர்த்தங்களை நினைவு கூர்ந்து உயிரிழந்தவர்களை அஞ்சலிக்கின்ற ஆழிப்பேரலை போன்ற நினைவு தினங்கள் வருகின்ற போதெல்லாம் கண்கள் கலங்கும். அனர்த்தங்களால் பல்வேறு தரப்பினரும் பல வழிகளிலும் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே, அனர்த்தங்கள் ஏற்படாமல் தடுக்கவேண்டிய அதே நேரத்தில் அனர்த்தங்களின் போது எவ்வாறு பாதுகாத்துக் கொள்வதும் முக்கியம்.

குறிப்பாக எமது மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய் அனர்த்தம் ஏற்பட்டிருக்கின்றது. இதனாலும் கூடப் பாதிப்புக்கள் ஏற்படுகின்ற அதேவேளையில் இழப்புக்களும் ஏற்படுகின்றன. இந்த டெங்கு நிலைமைகள் மேலும் தீவிரமாகாமல் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன் தாக்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்.

டெங்கு தாக்கம் உள்ளிட்ட அனர்த்தங்களின்போது எவ்வளவு அக்கறையாக இருக்கின்றோம் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. தனிப்பட்ட முறையில் கூட இதற்கு நாம் எல்லோரும் பொறுப்பு. இந்த நிலைமைகளைப் பார்க்கின்ற போது அரச அதிபரான எனக்கு மிக வேதனையாக உள்ளது.

ஒவ்வொருவரும் எப்போதும் சமூகம் சூழல் சார்ந்த அக்கறையோடு இருக்க வேண்டும். ஆகையினால் டெங்கு அனர்த்தப் பாதிப்பில் இருந்து எமது சமூகத்தை மீட்டெடுக்க வேண்டும்.

முதலில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம். அனைவரும் பொறுப்புணர்ந்து செயற்படவேண்டும்-என்றார்.

(அ)

# போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்!

கொழும்பு, டிசெ. 28

போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான ‘யுக்திய சுற்றிவளைப்பு’ நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

ஹோமாகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலே அவர் இந்த விடயத்தை கூறினார்.

அத்துடன், போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துக்களை அரசாங்கம் சுவீகரிக்கும் வகையில் பொலிஸ் சட்டப் பிரிவின் ஊடாக பொலிஸ் சட்டத்தரணிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

இதனிடையே, களுத்துறை வடக்கில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கான சீருடைகளை தைக்கும் தொழிலை நடாத்திவரும் நபர் ஒருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

களுத்துறை - பனாபிட்டிய பகுதியில் வைத்து களுத்துறை பிரதேச போதைப்பொருள் தடுப்புப் பிரிவினால் இவர் கைது செய்யப்பட்டார்.

(அ)

# பெந்தோட்டை கடலில் மூழ்கி வெளிநாட்டு பிரஜை மரணம்!

கொழும்பு, டிசெ. 28

இலங்கைக்கு நத்தார் பண்டிகையை கொண்டாட வந்த கஜகஸ்தான் பிரஜை ஒருவர் பெந்தோட்டைக் கடலில் நீராடிக்கொண்டிருந்தபோது கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் டிட்டோ வொல்லோவ் என்ற 51 வயது கஜகஸ்தான் பிரஜையாவார்.

இவர் நத்தார் பண்டிகையை கொண்டாடுவதற்காக தனது மனைவியுடன் இலங்கைக்கு வந்த நிலையில் இருவரும் காலி பெந்தோட்டையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில், இவர் தனது மனைவியுடன் பெந்தோட்டைக் கடலில் நீராடிக் கொண்டிருக்கும் போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(அ)

# அம்பாறையில் போதைப்பொருளை விநியோகிக்கும் பிரதான நபர் கைது!

அம்பாறை, டிசெ. 28
அம்பாறை பிரதேசத்துக்கு போதைப்பொருள் விநியோகித்ததாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நகரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை நகருக்கு ஐஸ் கொண்டு வந்து விநியோகம் செய்யும் பிரதான சந்தேக நபராக இவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)



# பல்கலைகளுக்கு தெரிவான மாணவர்களுக்கு செயலமர்வு

அம்பாறை, டிசெ. 28
நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகி தம் வாழ்வின் புதிய அத்தியாயத்தை தொடங்க காத்திருக்கும் மாணவர்களுக்கு துறைசார் வல்லுனர்களின் ஆலோசனைகளையும் சிரேஷ்ட மாணவர்களின் அனுபவப்பகிர்வுகளையும் உள்ளடக்கிய செயலமர்வு அக்கரைப்பற்று இளமானி பட்டப் பயிலுனர் சங்கம் மற்றும் ஐகோனிக் யூத் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பல்வேறு துறைகளில் பல்கலைக்கழகத்திற்கு தெளிவாக இருக்கின்ற ஏராளமான மாணவர்கள் இதில் பங்கு பற்றி பயன் பெற்றனர்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகங்கள் பற்றிய அறிமுகம், பல்கலைக்கழக மாணவர்களின் தொடர்புகள், நேர முகாமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்தி தொடர்பான பல்வேறு காத்திரமான விடையங்கள் கலந்துரையாடப்பட்டன.




இந் நிகழ்வில் வளவாளர்களாக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி எப்.எச்.இஸட். சிப்லி அஹமட், எம்.அப் துல் றஸாக் மற்றும் செல்வி.எம். ஐ. பாத்திமா நிஹ்லா ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# களுவாஞ்சிக்குடியில் 45 பிரிவுகளிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது தேசிய பாதுகாப்பு தினம்

காரைதீவு, டிசெ. 28
உலகை உலுக்கிய சுனாமி அனர்த்தத்தினை நினைவு கூரும் தேசிய பாதுகாப்பு தினத்தினை முன்னிட்டு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக மானது ஏற்பாடு செய்த பிரதான நிகழ்வானது நேற்று முன் தினம் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் தேற்றாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

இதனை முன்னிட்டு அனர்த்தங்களில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து மக்களுக்காக பிரார்த்தனை செய்யும் நிகழ்வு

இவ்வாறான இழப்புக்களிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பான பொதுமக்களுக்கு விழிப்புணர்வு. எதிர்காலத்தில் சுனாமி அனர்த்தத்தில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கான தயார்ப்படுத்தலை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வு அனர்த்த முகாமைத்துவ சேவை அபிவிருத்தி உத்தியோகத்தரினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

விசேட நிகழ்வாக மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது பொது மக்கள், ஆலய பரிபாலன சபையினர், கிராமஃமாதர் கிராம அபிவிருத்தி சங்கம், விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரின் பங்கேற்புடன் இடம்பெற்றிருந்தது.

இதில் விசேட அம்சமாக பிரதேச செயலக பிரிவின் 45 கிராம சேவகர் பிரிவுகளிலும் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களில் விசேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.



# அறிவுச்சுடர் போட்டியின் அங்குரார்ப்பண நிகழ்வு




அம்பாறை, டிசெ. 28
கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் 75 ஆவது ஆண்டு பவள விழாவை முன்னிட்டு றியோ மார்கட்டிங் நிறுவனத்தின் அனுசரணையில் அறிவுச் சுடர் ஸீசன் 2 கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும், அறிவுச் சமர் கலை மன்றமும் இணைந்து ஒழுங்குசெய்திருந்த மேற்படி அறிவுச் சமர் போட்டியில் கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி, கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி, நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலை, காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி, மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி , கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை என்பன பங்கேற்கவுள்ளன. (அ)

தாய்மார் ஆதரவு கழக செயற்பாட்டுக்காக

# நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு தேசிய ரீதியில் பாராட்டு

அம்பாறை, டிசெ. 28
தாய்மார் ஆதரவு கழக செயற்பாட்டில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தேசிய ரீதியில் 2023ஆம் ஆண்டிற்கான பாராட்டை பெற்றுள்ளது.

சென்ற வருடம் 2022 ஆம் ஆண்டின் தாய்மார் கழக செயற்பாடிலும் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு பாராட்டு கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வானது குடும்ப சுகாதார பணியகத்தினால் கொழும்பு தாஜ் சமுத்ராவில் நடாத்தப்பட்டது.

சிறந்த பவர்ப்போயிண்ட் முன்மொழிவினை முன்வைத்த நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே எல் எம் நயீஸ் அவர்களுக்கும் இதன் போது பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறந்த தாய்மார் கழக ஆதரவு செயற்பாட்டில் கலந்து கொண்ட நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக நேச்சர் லவ்வர் குழுமத்தின் உத்தியோகத்தர்களிற்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.



இச்செயற்பாட்டிற்காக இவ்வருடமும் இப்பாராட்டை பெற உதவிய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக நேச்சர் லவ்வர் எனும் தாய்மார் கழக உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் மற்றும் இதன் பங்குதாரர்கள் அனைவருக்கும் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி கே. எல். எம். நயீஸ் அவர்கள் நன்றி தெரிவித்தார். (அ)

# இன்னும் பல மாதங்களுக்கு காஸாவில் போர் தொடரும்!

## இஸ்ரேலிய இராணுவத் தளபதி

**ஜெருசலேம், டிசெ. 28**

**காஸாவில் ஹமாஸ் தரப்பினருடனான போர் 'இன்னும் பல மாதங்களுக்கு" தொடரும் என்று இஸ்ரேலிய இராணுவத் தளபதி ஹெர்சி ஹலேவி தெரிவித்துள்ளார்.**



இந்த விடயத்தில் தீர்வுகள் எதுவும் இல்லை எனவும் அவர் ஊடகவியலாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் போர் முடிவடையும் நிலையில் இல்லை என முன்னதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் மத்திய காஸா வரையில் தங்களது தரைவழி தாக்குதல் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படுவதாக இஸ்ரேலிய இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சுமார் 100 இற்கும் மேற்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, 11 வாரங்களுக்கும் மேலாக நடைபெற்று வரும் போரில் 20,915 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக காஸாவில் ஹமாஸ் தரப்பினரால் நடத்தப்படும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# டில்லியில் வரலாறு காணாத பனிமூட்டம்

## 10 விமானங்கள் தாமதம்

புதுடில்லி, டிசெ. 28



கடுமையான பனிமூட்டம் காரணமாக, புதுடில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்திலிருந்து இயக்கப்படும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.

கடுமையான பனிமூட்டம் காரணமாக, புதுடில்லி விமான நிலையத்திலிருந்து நேற்று காலை முதல் பல்வேறு இடங்களுக்குப் புறப்பட வேண்டிய மற்றும் வரவேண்டிய 110 விமானங்கள் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் புறப்படும் நேரம் குறித்து, பயணிகள் அந்தந்த விமான சேவை நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு கேட்டறியவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், டில்லி ரயில் நிலையத்திலிருந்து இயக்கப்படும் 25 க்கும் மேற்பட்ட ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது. (அ)

# இஸ்ரேலிய தூதரகம் அருகே வெடிவிபத்து!

## புதுடில்லியில் பரபரப்பு

புதுடில்லி, டிசெ. 28



புதுடில்லியில் உள்ள இஸ்ரேலிய தூதரகத் திற்கு அருகே நேற்று முன் தினம் மாலை வெடிவி பத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

எனினும் இதன்காரணமாக உயிர்சேதங் களோ காயங்களோ ஏற் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தை அடுத்து இந்திய அதிகாரிகள் இன்னும் அந்த பகுதியை ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்தியாவில் உள்ள தனது குடிமக்களை, குறிப்பாக புதுடில்லியில் உள்ளவர்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு இஸ்ரேல் வலியுறுத்தியது.

பலஸ்தீன காசா பகுதியில் ஹமாஸ் போராளிகளுக்கு எதிராக இஸ்ரேல் தனது எதிர் தாக்குதலை தொடங்கியதில் இருந்து, யூத எதிர்ப்பு தாக்குதல்கள் அதிகரித்து வருவதால், உலகம் முழுவதும் உள்ள இஸ்ரேலிய தூதரகங்கள் எச்சரிக்கையுடன் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் மாலை 5:20 மணியளவில் புதுடில்லி தூதரகத்திற்கு அருகாமையில் குண்டுவெடிப்பு நிகழ்ந்ததாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2021 ஜனவரியிலும் புதுடில்லியில் உள்ள இஸ்ரேலிய தூதரகம் அருகே யாருக்கும் தீங்கு விளைவிக்காத வகையில் ஒரு சிறிய குண்டு வெடிப்பு சம்பவம் பதிவானது.

எனினும், இந்த குண்டுவெடிப்பை பயங்கரவாத சம்பவமாகவே கருதுவதாக இஸ்ரேல் தெரிவித்திருந்தது. (அ)

# ரஷ்ய போர் கப்பலை அழித்ததா உக்ரைன்?

கீவ், டிசெ. 28



ரஷ்யாவின் கிரிமியா கடற்பகுதியில் நங்கூரமிடப்பட்டிருந்த ரஷ்யப் போர்க்கப்பலை தாக்கி அழித்ததாக உக்ரைன் விமானப் படை தெரிவித்துள்ளது.

உக்ரைனின் தாக்குதல் காரணமாக பியோடோசியா துறைமுகத்தில் தீ பரவியதாக கிரிமியா ஆளுநர் கூறியிருந்தார் இதனையடுத்தே ரஷ்ய போர் கப்பல் மீது தாக்குதல் நடத்தி அழித்ததாக உக்ரைன் விமானப்படை கூறியுள்ளது.

ரஷ்ய கடற்படையின் பலம் குறைந்து கொண்டே வருகிறது எனவும் உக்ரைன் விமானப்படையின் விமானிகளும் விமான தாக்குதல் தொடர்பில் பணியாற்றுவோரின் திறமையாக செயற்பாடுகள் காரணமாக இது சாத்தியமானது எனவும் உக்ரைன் விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளார். எனினும் அது தொடர்பான ஆதாரங்களை அவர் வெளியிடவில்லை.

உக்ரைன் விமானப்படையினர் ஃபெடோசிய துறைமுகத்தின் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியதாக விமானப்படை வெளியிட்டுள்ள மற்றுமொரு அறிக்கையில் கூறியுள்ளது.

உக்ரைன் நேரப்படி நேற்று முன் தினம் அதிகாலை 2.30 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதலில் ரஷ்யா கருங்கடல் பகுதியில் நங்கூரமிடப்பட்டிருந்த நொவோசெர்காஸ்க் என்ற போர்க்கப்பல் அழிக்கப்பட்டதாக ரஷ்ய விமானப்படை கூறியுள்ளது.

எனினும் அதற்கான ஆதாரங்களை விமானப்படையினர் வெளியிடவில்லை.

இந்த நிலையில், உக்ரைன் விமானப்படையின் இந்த தகவலை உடனடியாக உறுதி செய்ய இயலவில்லை என சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை தமது போர்க் கப்பல் தாக்கப்பட்டதாக உக்ரைன் விமானப்படை வெளியிட்டுள்ள தகவலை ரஷ்யா உறுதிப்படுத்தியுள்ளதுடன் கப்பல் அழியவில்லை எனவும் சேதமடைந்துள்ளது எனவும் கூறியுள்ளது. (அ)

# தென் சீனக்கடலில் அத்துமீறவில்லை!

## சீனாவின் குற்றச்சாட்டை மறுக்கும் பிலிப்பைன்ஸ்

மணிலா, டிசெ. 28



சீனா சுமத்தியுள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ள பிலிப்பைன்ஸ் இராணுவத்தின் செய்தித்தொடர்பாளர் கேர்ணல் மெடெல் அகுயிலார், தென்சீனக் கடலில் சீனாவுடன் மோதல் ஏற்படும் வகையில் தூண்டிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என தெரிவித்துள்ளார்.

தனக்கு சொந்தமான கடல் பகுதிக்குள் பிலிப்பைன்ஸ் அத்துமீறி பிரவேசிப்பதாக சீனா கம்யூனிஸ்ட் கட்சி நாளிதழான பீப்பள்ஸ் டெய்லி சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனை கூறியுள்ளார்.

சர்வதேச சட்டத்துக்கு உட்பட்டே பிலிப்பைன்ஸ் செயற்பட்டு வருகிறது.

பிலிப்பைன்ஸ் கடல் எல்லைக்குள், நாட்டின் தனிப்பட்ட பொருளாதார மண்டலத்திற்குள் மாத்திரமே கடற்படையினர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் கேர்ணல் மெடெல் அகுயிலார் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் அமெரிக்காவுடன் இணைந்து பிலிப்பைன்ஸ் தென்சீனக் கடலில் மோதலைத் தூண்டிவிடும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக சீனா குற்றம் சுமத்தியுள்ளது.

இப்படியான நடவடிக்கைகள் மிகவும் ஆபத்தானவை எனவும் அது பிராந்தியத்தின் அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் சீர்குலைக்கும் என சீனா குறிப்பிட்டிருந்தது.

இதற்கு பதிலளித்துள்ள கேர்ணல் மெடெல் அகுயிலார், தென்சீனக் கடலில் இருக்கும் கப்பல்கள், கடலோடிகளுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் பிலிப்பைன்ஸ் செயல்படவில்லை என கூறியுள்ளார்.

எனினும் சீனா பயங்கரமான பல நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது எனவும் இதனால் சில சமயங்களில் கடலில் விபத்துகள் ஏற்படுவதாகவும் சீனாவே அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகிறது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

# அடுத்த தேர்தலிலும் ஆட்சி அதிகாரம் பெற்றுக்கொள்வதே என் எதிர்பார்ப்பு!

## கூறுகிறார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, டிசெ. 28

**அடுத்த தேர்தலிலும் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொள்வதே தனது எதிர்பார்ப்பு என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சிக்கு செல்வதோ அல்லது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமைத்துவத்தை பெறுவதோ எமது எதிர்பார்ப்பு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன் தினம் இரண்டாவது நாளாக ஆரம்பமான "கிரிந்திவெல மகிழ்ச்சியான குடும்பம்" கல்வி மற்றும் வர்த்தக கண்காட்சியின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிரிந்திவெல மகிழ்ச்சியான குடும்பக் கல்விக் கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சி கிரிந்திவெல மத்திய மகா வித்தியாலயம் மற்றும் கிரிந்திவெல மகா வித்தியாலயத்தை மையமாகக் கொண்டு கடந்த 25 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் ஆரம்பமானது.

அது 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இது அரச, பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறைகளில் 50 க்கும் மேற்பட்ட கல்வி மற்றும் வர்த்தக கடைத் தொகுதிகளைக் கொண்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

கேள்வி - அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டு. கட்சிக்கு புதிய தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பீர்களா?

பதில்- அப்படி எதுவும் இல்லை. தற்போது இருக்கின்ற அமைப்பாளர்களின் தவறில்லை. தேர்தலும் உண்டு.

கேள்வி- கட்சியில் இருந்து விலகியவர்கள் தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை என்ன?

பதில்- கட்சியில் இருந்து விலகியவர்களுக்கு பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள். அந்த விஷயங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன என்று நினைக்கிறேன்.

கேள்வி- இந்நாட்களில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்.

பதில்- இந்த அரசாங்கம் செய்த சிறந்த பணியாக நான் இதைக் கருதுகிறேன். போதைப்பொருளால் இந்த நாடு அழிந்து வருகிறது.



கேள்வி- எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்க நீங்கள் தயாராகி வருவதாகப் பேசப்படுகிறது. அது உண்மையா?

பதில்- இதுவரை அப்படி ஒரு கதை இல்லை. அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது எங்கள் எதிர்பார்ப்பு. எதிர்க்கட்சிக்கு செல்லும் எதிர்பார்ப்பு எம்மிடம் இல்லை.

கேள்வி- எதிர்காலத்தில் வரி குறைக்கப்படுமா? அதிகரிக்கப்படுமா?

பதில்- வரிகளை நீக்க முடியாது, வரிகள் இருக்கும். அதாவது மக்களுக்கு நியாயமான வரி முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்று நான் கூறுகிறேன்.

அதேவேளை, ஜனவரி 9 ஆம் திகதி பாராளுமன்றம் கூடவுள்ளது. இதன்போது மொட்டு கட்சியின் எம்.பிக்கள் சிலர் எதிரணியில் அமரக்கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கட்டைக்காடு பகுதியில் பொலிஸார் சோதனை!

வடமராட்சி, டிசெ. 28

வீடு ஒன்றில் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நடத்தப்பட்ட நீண்டநேர தேடுதலில் எதுவும் கிடைக்கவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்பு கடத்தல்காரர்கள் கைவிட்டுச் சென்ற கஞ்சாப் பொதிகள் கடற்கரையில் கரையொதுங்கியிருந்தன. இவற்றை கடற்படையினர் நேற்று முன்தினம் கைப்பற்றியிருந்தனர். எனினும், இவ்வாறு கரையொதுங்கிய பொதிகள் சிலவற்றை சிலர் எடுத்துச் சென்றிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே கட்டைக்காட்டில் பொலிஸாரால் நேற்று முன் தினம் மதியம் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு தேடுதல் முன்னெடுக்கப்பட்டது. (அ)

# உயர்தர பரீட்சைக்கு முன் டெங்கு ஒழிப்புத் திட்டம்!

கொழும்பு, டிசெ. 28

கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வளாகங்களையும் சுத்தப்படுத்தும் விசேட வேலைத்திட்டம் தேசிய டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைவதாக அந்த சங்கத்தின் தலைவர் நிஜித் சுமனசேன தெரிவித்தார்.

தற்போது தினசரி டெங்கு நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மழைப்பொழிவு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருகிறது. நுளம்பு வளர்ச்சிக்கு சாதகமான சூழல் உள்ளது. ஜனவரியில் உயர் தர பரீட்சை ஆரம்பமாகிறது. இதன்படி, தேசிய டெங்கு ஒழிப்பு திட்டத்தின் அறிவுறுத்தலின் படி, உயர் தரப் பரீட்சைகள் நடைபெறும் பாடசாலைகளில் இந்த டெங்கு ஒழிப்பு திட்டம் துரிதமாக இடம்பெறும். இது டிசம்பர் 31 இற்குள் முடிக்கப்படும் என்று அவர் கூறினார். (அ)

# பாடசாலைகளில் திருட்டில் ஈடுபட்ட மாணவர்கள் கைது

கொழும்பு, டிசெ. 28

முந்தல் பகுதியில் உள்ள மூன்று பாடசாலைகளில் உபகரணங்களை சேதப்படுத்தி, சுமார் 8 இலட்சம் பெறுமதியான பணம் மற்றும் உபகரணங்களை திருடிய குற்றச்சாட்டின் கீழ் மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், கைது செய்யப்பட்ட மாணவர்களால் திருடப்பட்டதாக கூறப்படும் மடிக்கணினி, மைக், வைபை ரவுட்டர், புரஜெக்டர் உள்ளிட்ட உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

முந்தல் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை உள்ளிட்ட இரண்டு ஆரம்ப பாடசாலைகளில் உபகரணங்களைச் சேதப்படுத்தி, உபகரணங்களையும் பணத்தையும் திருடியுள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு இரண்டு தடவைகள் குறித்த பாடசாலைகளுக்குள் புகுந்து பணத்தை திருடிய மாணவர்கள், பணம் கிடைக்காதபோது அந்த பாடசாலைகளில் இருந்த உபகரணங்களை திருடிச் சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆயத்தமாகும் ஐ.தே.க.!

கொழும்பு, டிசெ. 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியானது அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தொடர் கூட்டங்களை நடத்தவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 2024 ஜனவரி 19 முதல் தேர்தல் தொடர்பான தொடர் கூட்டங்களை நடத்தும்.

முக்கிய பொதுக்கூட்டத்தை முதலில் கொழும்பில் நடத்துவதற்கு கட்சி தீர்மானித்துள்ளது, அதன் பின்னர் நாட்டின் ஏனைய பகுதிகளில் மேலும் பல பேரணிகள் நடத்தப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மற்றும் அது தொடர்பான ஏனைய குழுக்களுக்கான உறுப்பினர்கள் நியமனம் அடுத்த வருடம் ஜனவரி மாதத்திற்குள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# யுக்திய நடவடிக்கை நேற்று மீள ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 28

'யுக்திய' தேடுதல் நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது. போதைப்பொருள் கடத்தல், பாதாள குழுக்களின் செயற்பாடுகளுக்கு முடிவுகட்டப்படும் வரை அது தொடரும். எந்த சக்தியாலும் அந்த நடவடிக்கையை நிறுத்த முடியாது."

-இவ்வாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டமையால் கடந்த 2 தினங்கள் யுக்திய சுற்றிவளைப்பு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் யுக்திய சுற்றிவளைப்பு நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சகலரையும் சட்டத்துக்கு முன் நிறுத்தும் வரையில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்படும் என அவர் கூறினார். (அ)

# புத்தாண்டில் ஐ.தே,கவுக்கு புதிய தலைமைத்துவ குழு

கொழும்பு, டிசெ. 28

புத்தாண்டில் கட்சியை நடத்துவதற்கு ஐக்கிய தேசிய கட்சி தலைமைத்துவ சபையொன்றை நியமிக்கவுள்ளதுடன், புதிய அமைப்புக்கு சில அதிகாரங்களை வழங்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்துள்ளார்.

தலைமைத்துவச் சபையில் ருவான் விஜேவர்தன, ஹரீன் பெர்னாண்டோ, வஜிர அபேவர்தன, ரவி கருணாநாயக்க, சாகல ரத்நாயக்க, அகில விராஜ் காரியவசம் மற்றும் பாலித ரங்கே பண்டார ஆகியோர் இடம்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய வருடத்தில் தலைமைத்துவ சபையொன்று நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ உறுதிப்படுத்தினார்.

நான், பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, வஜிர, சாகல, அகில, ரவி ஆகியோர் சபையில் இருப்போம். ஆனால் ஏனையவர்கள் தொடர்பில் உறுதியாக தெரியவில்லை என்றும் அவர் கூறினார். (அ)

# நீரில் மூழ்கி மாணவன் பலி

கொழும்பு, டிசெ. 28

நாவலப்பிட்டி, கலபொட நீர்வீழ்ச்சியில் மூழ்கி 15 வயது மாணவர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நண்பர்கள் சகிதம் குளித்துக் கொண்டிருந்தபோதே குறித்த மாணவன் நீரில் மூழ்கியுள்ளார்.

கடும் போராட்டத்துக்கு மத்தியில் மீட்கப்பட்டு அவர் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாலும், உயிரிழந்துள்ளார்.

கடுகன்னாவ, பானபொக்கவை சேர்ந்த பசிந்து சமோத் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் .

நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## இலங்கையில்...

இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர், தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனை அவரது கொழும்பு இல்லத்தில் நேற்று சந்தித்து பேசினார்.

இதன்போதே நியூசிலாந்து தூதுவர் மேற்கண்டவாறு கூறினார் என்று சம்பந்தன் எம். பி. தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இலங்கைக்கான தூதுவர் பதவியிலிருந்து விரைவில் விடை பெறவுள்ள நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் இன்று (நேற்று) காலை என்னைச் சந்தித்தார். இது நல்ல சந்திப்பு. இதன்போது பல முக்கிய விடயங்கள் தொடர்பில் பேசினோம்.

அதிலும் முக்கியமாக அரசியல் தீர்வு சம்பந்தமாகப் பேசினோம். இலங்கையில் அமைதியையும் நீதியையும் ஏற்படுத்தும் வகையில் நியாயமான - நிலையான அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்றும், அப்போதுதான் நாடு முன்னேற்றமடையும் என்றும் அவரிடம் நான் கூறினேன்.

அதேவேளை, சர்வதேச ஒப்பந்தங்கள், சர்வதேச வாக்குறுதிகள் மற்றும் ஐ.நா. தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் அவரிடம் நான் தெரிவித்தேன்.

தமிழ்பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீளிணைக்கப்பட வேண்டும் என்பதையும் அவரிடம் எடுத்துரைத்தேன்.

இவை தொடர்பில் இலங்கை அரசுக்கு நியூசிலாந்து உள்ளிட்ட அனைத்து வெளிநாடுகளும் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவரிடம் வலியுறுத்தினேன். வடக்கு - கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் நீண்டகால மற்றும் குறுகிய காலப் பிரச்சினைகள் தொடர்பிலும் அவரிடம் தெளிவுபடுத்தினேன்.

எனது கருத்துக்களை நியூசிலாந்து தூதுவர் ஏற்றுக்கொண்டார். தமது நாட்டில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது என்றும், அங்கு மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள் என்றும் கூறிய நியூசிலாந்து தூதுவர் அதே நிலைமை இலங்கையிலும் ஏற்பட வேண்டும் என்று தமது நாட்டு அரசு விரும்புவதாகவும் தெரிவித்தார். இலங்கையில் அமைதி ஏற்பட அரசியல் தீர்வு கட்டாயம் காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். வடக்கு, கிழக்குக்குத் தான் நேரில் விஜயம் செய்து பல தரப்பினரையும் சந்தித்துப் பேசியதாகவும் அவர் என்னிடம் கூறினார். இலங்கைக்கும், இங்கு வாழும் அனைத்து இன மக்களுக்கும் நியூசிலாந்து தொடர்ந்தும் உதவும் என்றும் அவர் உறுதியளித்தார்." - என்று சம்பந்தன் எம்.பி. குறிப்பிட்டார். (அ)

## மேலும்...

வந்த நிலையில் , சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை காலை உயிரிழந்தார்.

இதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்திரம் 71 பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

ஏற்கனவே, டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு காரணமாக இரண்டு விடுதிகள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன. குழந்தை நோயாளர் விடுதியும் நிரம்பி உள்ளது என வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை 11 மாதக் குழந்தை ஒன்று டெங்கு காய்ச்சலினால் உயிரிழந்தது. கடந்த சனிக்கிழமை டெங்கு காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு வழங்கப்பட்ட மருந்து ஒவ்வாமை ஏற்பட்டமையால் அவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

## தரமற்ற...

திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு கிடைத்த 21 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு விதைகள் குப்பிளானில் அண்மையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குறித்த விதை உருளைக்கிழங்குகள் பெக்டோ பெக்டீரியம் கெரெட்டோபோரம் எனப்படும் பற்றீரியா தாக்கத்துக்கு உள்ளானமையால் பழுதடைந்திருந்தமை தொடர்பில் கடந்த டிசெம்பர் 17 ஆம் திகதி கண்டறியப்பட்டது.

குறித்த பற்றீரியா தாக்கத்தினால் 21 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்குகளையும் பயன்படுத்த முடியாத நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், களஞ்சியப்பட்டுத்தப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்கு தொடர்பாக ஆராய கொழும்பில் இருந்து விசேட குழு ஒன்று நேற்று விஜயம் செய்து பார்வையிட்டது.

விவசாய அமைச்சின் விவசாயத் தொழில் நுட்ப பணிப்பாளரும் நவீன மயமாக்கல் திட்டம் பிரதிப் பணிப்பாளருமாகிய அநுர வியதுங்க, வட மாகாண விவசாய நவீனமாக்கல் திட்டத்தின் பிரதி மாகாண திட்டப் பணிப்பாளர் ஏ.விஜிதரன், விவசாய விஞ்ஞானி லெஸ்லி, நவீன மயமாக்கல் திட்ட உள்ளக கணக்காய்வாளர் வீரசிங்க, யாழ்ப்பாண உருளைக்கிழங்கு நவீனமயமாக்கல் திட்ட சங்கத்தின் தலைவர் துசியந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தேசிய தாவர தடுப்பு காப்பு சேவையின் ஆலோசனையின் பின்னர் உருளைக்கிழங்கு விதைகள் தொடர்பாக முடிவு எட்டப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## தமிழர்கள்...

தேர்தலை பகிஷ்கரிப்பது தான் தமிழ் மக்களுக்கு உள்ள ஒரேயொரு தெரிவு என்றும் அதனையே தாம் தொடர்ந்தும் வலியுறுத்துவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

சிங்கள தரப்பில் இனிமேலும் தொடர்ச்சியாக வாக்களித்து நாங்கள் ஏமாறக்கூடாது என்கின்ற ஒரு தெளிவான செய்தியை இந்த தேர்தலில் உலகத்திற்கு காட்ட வேண்டும் என்கின்ற உறுதியான நிலைப்பாட்டோடு தமிழ் மக்கள் இருக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## கிளிநொச்சி...

அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி குளத்திலிருந்து பழைய முறையைப் பயன்படுத்தி நீர் சுத்திகரிக்கப்பட்டு சுமார் 7000 இணைப்புகள் மூலம் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனால், குளத்தில் மனிதக் கழிவுகள், மலசலகூடக் கழிவுகள், வாகன கழிவு ஒயில்கள், நகரக் கழிவுகள், விவசாயக் கழிவுகள் என பலதும் கிளிநொச்சி குளத்தில் கலக்கப்படுவதால் தண்ணீர் மாசுபட்டுள்ளது.

எனினும், தற்போது மிகப்பெரிய திட்டம் ஒன்றின் ஊடாக நவீன சுத்திகரிப்பு முறை மூலம் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படுகிறது. அடுத்த வருடம் முதல் பகுதியில் அதன் மூலம் சுத்திகரிப்பு பணிகள் ஆரம்பிக்கப்படும் என நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பொறியியலாளர் தெரிவித்தார்.

இந்நிலையில், இரணைமடுக்குளத்தில் இருந்து நீரை நேரடியாக பெறுவது தொடர்பிலும் ஆலோசனை முன்வைக்கப்பட்ட போதிலும், அதில் சமூகம் சார்ந்த பிரச்னைகள் எழும் என பொறியியலாளர் தெரிவித்தார்.

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் விஜயத்தின்போது தான் பேசுவதாகவும், அதற்கான மாற்றும்மொழிவுகளை தருமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு தெரிவித்தார். (அ)

# வடமராட்சி கிழக்கில் ஒதுங்கியது தெப்பம்



யாழ்ப்பாணம், டிசெ. 28

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் வெளிநாட்டிலிருந்து அடித்து வரப்பட்ட மிதக்கும் அமைப்பொன்று கரையொதுங்கியுள்ளது.

மத வழிபாட்டு அமைப்பொன்றே கரையொதுங்கியுள்ளது. தென்கிழக்காசிய நாடொன்றிலிருந்து இந்த மிதக்கும் அமைப்பு அடித்து வரப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

அந்த அமைப்பை பார்க்கும் போது, தாய்லாந்தின் பௌத்த வழிபாட்டு அமைப்பை போலிருப்பதாகவும் கௌதம புத்தரின் வழிபாட்டு அமைப்பு கரையொதுங்கிய சம்பவமென அங்கு விகாரை கட்டும் முஸ்தீபு ஆரம்பிக்கலாமென்றும் பிரதேசவாசிகள் நகைச்சுவையாக பேசிக்கொண்டதை அவதானிக்க முடிந்தது.

## சிறிய நடுத்தர...

கலைக்கூடல் மற்றும் யாழ் வணிகர் கழகம் இணைந்து ஏற்பாடு செய்த சிறிய நடுத்தர வர்த்தக கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவை பொறுத்தவரை சிறிய நடுத்தர உற்பத்தியாளர் 40 வீதமான பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்பை செய்கின்றார்கள்.

அதேபோல், ஏற்றுமதியில் 50 வீதமானவை சிறிய நடுத்தர உற்பத்தி ஏற்றுமதியில் பங்களிப்பை செய்கின்றன. அது மட்டுமன்றி வேலைவாய்ப்பு வழங்குவதிலும் இவர்களே முன்நிலையில் உள்ளார்கள்.

அவ்வாறான நிலையில் இலங்கையில் வடக்கு மாகாணத்திற்கும் சிறிய நடுத்தர உற்பத்தியாளர்கள் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் வகையில் தமது உற்பத்தியின் தரத்தை மேப்படுத்த வேண்டும். இந்தியா அதற்கான உதவிகளை வழங்கும்

பொருளாதார உற்பத்தியில் சரியான நடைமுறைகளை பின்பற்றி தரநிர்ணயங்களை செய்வதன் மூலம் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தி கொள்ளமுடியும்.

இந்த கண்காட்சியில் 140க்கும் மேற்பட்ட விற்பனை காட்சிக் கூடங்கள் உள்ளன. இவை இன்னும் தரமாக கவர்ச்சிகரமாக இருக்கும்போது இந்தியாவுக்கோ, ஐரோப்பாவுக்கோ ஏற்றுமதி செய்யும் போது பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியும்.

இத்தகைய கண்காட்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும்போது தொடர்பாடல்கள் அதிகரிக்கும். இவைதொடர வேண்டும்-என்றார்.

யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரன் உரையாற்றுகையில், "சிறிய நடுத்தர முயற்சியாளர்களை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கும் வடக்கில் உள்ள உற்பத்தியாளர்களை ஏனையவர்கள் அடையாளம் கண்டு கொள்வதற்காக இந்த கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

வடக்கின் பொருளாதார அபிவிருத்தியில் இவர்கள் பங்களிப்பு முக்கியமானது. இந்த முயற்சியாளர்களை அடுத்த கட்டத்துக்கு தமது பொருட்களை கொண்டு செல்வதற்கு ஏற்ற ஒழுங்கமைப்புகளை செய்வதற்கு இந்தியா உதவி செய்ய வேண்டும்.

இந்தியாவின் உதவி தேவையானவர்கள் வணிகர் சங்கத்தையோ அல்லது இந்திய துணைத் தூதுவராலயத்தையோ தொடர்பு கொள்ள முடியும்.

இந்த கண்காட்சியை ஒவ்வொரு வருடமும் நடாத்துவதற்கு எண்ணியுள்ளோம்" என்று அவர் குறிப்பிட்டார்.(அ)

## ஜப்பானிய...

வைக் குறிக்கும் வகையில் அவரின் வருகை அமையவுள்ளது.

இலங்கை வரும் அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து, நாட்டுக்கான கடன் மறுசீரமைப்பு குறித்து விவாதிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பான் தலைமையிலான கடனாளிகள் குழு கடனைத் திருப்பிச் செலுத்துவதை ஒத்திவைப்பது மற்றும் வட்டி விகிதங்களைக் குறைப்பது தொடர்பான அடிப்படை உடன்பாட்டை கடந்த மாதம் எட்டியது.

இதனை அடுத்து கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு நிலையான முன்னேற்றம் மிகவும் அவசியம் என ஜப்பானிய நிதியமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வாள்வெட்டு...

இணைந்து கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேக நபரிடம் இருந்து 15 லீற்றர் கசிப்பும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (அ)

## பொது...

வேட்பாளர் ஒருவர் இல்லை என்பதுடன் அவர்கள் கைவிடப்பட்ட நிலைமையில் உள்ளனர்.

சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி, பொதுஜன பெரமுனவின் ஒரு அணி ஆகிய தரப்புக்கு ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் இல்லை.

இதனால், இந்த அணிகளின் விருப்பம் மற்றும் இணக்கத்துடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன வேட்பாளராக போட்டியிட தயார்.

1950ஆம் ஆண்டுகளை சேர்ந்தவர்களே தற்போது நாட்டை ஆட்சி செய்கின்றனர். அவர்களுக்கு தற்போதைய இளைய தலைமுறையின் எண்ணங்கள் மற்றும் அபிலாஷைகள் பற்றிய எந்த புரிதலும் இல்லை-என்றார். (அ)

Eelanadu ஈழநாடு

# இந்தியா, அமெ. நிகழ்ச்சி நிரலில் இயங்கும் சுமந்திரன், சம்பந்தன்!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 28

**“இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கமையச் செயற்படும் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் விரும்பும் அரசியல் தீர்வை வழங்க பொதுஜன பெரமுன ஒருபோதும் இணங்கவே மாட்டாது” என்று மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.**




அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கட்சிகள் நடத்தும் சந்திப்புக்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனும் எல்லை மீறிப் பேசுகின்றனர். அரசமைப்பை மீறி எதனையும் செய்ய முடியாது என்பதை அரசியலில் முதிர்ச்சி பெற்ற அவர்கள் இருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இறுதியாக ஜனாதிபதியுடன் வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் நடத்திய பேச்சின்போது வெறும் 4 தமிழ் எம்.பிக்கள் மாத்திரம் கலந்துகொண்டுள்ளனர். அதில் பங்கேற்ற கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், ஜனாதிபதியை மிரட்டும் வகையில் பேசியுள்ளார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்றும், இல்லையேல் தாம் சர்வதேசத்தை நாடுவோம் என்றும் சம்பந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார். அது ஒருபோதும் சாத்தியப்படாத விடயமாகும். சர்வதேசத்தை நம்பி ஏமாறாதீர்கள் என்று சம்பந்தன், சுமந்திரனிடம் சொல்லி வைக்கின்றேன்-என்றார்.

# இந்த மாத இறுதியில் மீண்டும் உயரும் எரிபொருள்கள் விலை

கொழும்பு, டிசெ. 28

இம்மாத இறுதியில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாதாந்த எரிபொருள் விலை திருத்தமே இதற்குக் காரணம் எனவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மேலும் எரிபொருளில் புதிதாக 18 வீதம் வற் வரி சேர்க்கப்பட உள்ளதாகவும், ஆனால் எரிபொருளில் இருந்து 8 வீத துறைமுக கட்டணங்கள் நீக்கப்பட்டதால், எரிபொருள் விலை 10 வீதம் மட்டுமே அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த விலை திருத்தங்கள் ஜனவரி 1, 2024 முதல் நடைப்படுத்தப்படும் எனவும் கூறப்படுகின்றது.

# வட பகுதிக்கான ரயில் சேவைகள் ஜனவரி 7 ஆம் திகதியுடன் நிறுத்தம்

கொழும்பு, டிசெ. 28

வடக்கு ரயில் மார்க்கத்தை நவீனமயமாக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஜனவரி 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே மஹவ தொடக்கம் அனுராதபுரம் வரையான வடக்கு ரயில் மார்க்கம் அன்றைய தினம் முதல் 06 மாத காலத்திற்கு மூடப்படும் என அதன் பிரதி முகாமையாளர் என்.ஜே. இந்திபொலகே குறிப்பிட்டார்.

இந்த காலப்பகுதியில் கொழும்பில் இருந்து மஹவ மற்றும் அனுராதபுரத்திலிருந்து காங்கசன்துறை வரை மட்டுமே ரயில் சேவைகள் இடம்பெறும் எனவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கிறிஸ்மஸ் பண்டிகை நீண்ட விடுமுறையில் சொந்த இடங்களுக்குச் சென்ற மக்கள், மீண்டும் கொழும்புக்கு திரும்புவதற்காக விசேட போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இந்த போக்குவரத்து சேவைகள் எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என அதன் தலைவர் லலித் டி அல்விஸ் கூறினார். (அ)

# எம்.பிக்களில் பலர் வெளிநாடுகளுக்கு!

கொழும்பு, டிசெ. 28

விடுமுறையை கழிக்க எம்.பிக்கள் வெளிநாடுகளுக்கு..

புத்தாண்டு விடுமுறையைக் கழிப்பதற்காக இருபதுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளில் இருப்பதாக பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பலர் உறவினர்களை சந்திக்கவும், பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளை கவனிக்கவும் வெளிநாடுகளில் உள்ளனர்.

வெளிநாடு சென்ற பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஏற்கனவே அண்மைய நாட்களில் நாடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, நுவரெலியாவிலுள்ள ஜெனரல் ஹவுஸ் பாராளுமன்ற உறுப்பினர் பங்களாவின் அறைகள் இம்மாதம் 14ஆம் திகதி முதல் ஜனவரி முதலாம் திகதி வரை பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அங்கத்தவர்கள் சேவைகள் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த காலப்பகுதிக்குள் கிட்டத்தட்ட நூறு எம்.பி.க்கள் அந்த பங்களாவை முன்பதிவு செய்துள்ளதாகவும் பாராளுமன்ற அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு கடந்த 13ஆம் திகதி நடைபெற்றதையடுத்து, சபாநாயகர் பாராளுமன்றத்தை எதிர்வரும் ஜனவரி 9ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார். இதனால் எம்.பி.க்கள் அனைவருக்கும் கிட்டத்தட்ட ஒரு மாதம் விடுமுறை கிடைத்துள்ளது. (அ)

# தலைவர் பிரபாவின் படம், புலிச் சின்னத்துடன் மாவீரர் தினத்துக்கு சென்றவருக்குப் பிணை!

யாழ்ப்பாணம், டிசெ. 28

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் தலைவரது படம் மற்றும் சின்னம் பொறித்த ரீசேர்ட் அணிந்து மாவீரர் தினத்தில் பங்கெடுத்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி கொடிகாமத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் மற்றும் தலைவரது புகைப்படம் தாங்கிய ரீசேர்ட் அணிந்து கொண்டு மாவீரர் தினத்தில் பங்கு பற்றிய நிலையில் அன்றைய தினமே இராணுவத்தினரால் குறித்து இளைஞர் கைது செய்யப்பட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குறித்த இளைஞருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்திய போது அவரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இளைஞர் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன், இளைஞரை விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியை பெறுவதற்கான விண்ணப்பத்தை மன்றில் செய்திருந்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இனைஞரை பிணையில் விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்து நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த இளைஞரை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட இளைஞரின் சார்பில் சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன் முன்னிலையாகி வாதாடி இருந்தார். (அ)

# போயா நாளில் பொலிஸாருக்கு மதுபானம் விற்றவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், டிசெ. 28

போயா தினத்தில் பொலிஸாருக்கு பியர் விற்பனை செய்த ஒருவர் கையும் களவுமாக பிடிபட்ட சம்பவம் மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றது.

மானிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள மதுபான விற்பனை நிலையத்திலேயே நேற்று முன்தினம் இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செயல்படும் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மாறுவேடத்தில் சென்ற பொலிஸாருக்கு பியர் விற்பனை செய்த போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட 36 வயதான சந்தேக நபர் மேலதிக நடவடிக்கைக்காக மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (அ)

# வர்த்தகர்கள் இருவரை கொலை செய்ய திட்டம்

## ஒருவர் கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, டிசெ. 28

கட்டுநாயக்கவில் இருவரைக் கொலை செய்யத் திட்டமிட்டார் என்ற சந்தேகத்தில் ஹினடியன மஹேஷ் என்ற பாதாள உலகத் தலைவரின் சகா கைது செய்யப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

யுக்திய நடவடிக்கையின் கீழ் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து ஒன்பது மில்லிமீற்றர் கைத்துப்பாக்கி மற்றும் பல தோட்டாக்களையும் கட்டுநாயக்க பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இரண்டு வர்த்தகர்களை கொலை செய்வதற்கான ஒப்பந்தத்தை அவர் பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# போதகர் ஜெரோமின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 28

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை எதிர்வரும் ஜனவரி மாதம் 03 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு புதுக்கடை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் அவர் நேற்று ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, வாக்குமூலமொன்றை வழங்குவதற்காக கடந்த முதலாம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வருகை தந்தபோதே அவர் கைது செய்யப்பட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட்:

# கே. எல். ராகுல் அதிரடி சதம்; இந்திய அணி 245 ஓட்டங்கள்

செஞ்சூரியன், டிசெ. 28

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 245 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இந்திய வீரர் கே.எல். ராகுல் சதம் விளாசினார்.


இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் விளையாடி வருகிறது. இரு அணிகளும் இருபது - 20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடிய நிலையில், இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பலப்பரீட்சை மேற்கொண்டு வருகின்றன.

இந்தத் தொடரின் முதல் போட்டி செவ்வாய்க்கிழமை செஞ்சூரியனில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இந்திய அணிக்காக தலைவர் ரோஹித் சர்மா மற்றும் யஷஸ்வி ஜெய்ஸ்வால் இணையர் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் கண்டனர். அணித் தலைவர் ரோஹித் 4 ஓட்டங்களில் வெளியேறினார். தொடர்ந்து ஜெய்ஸ்வால் 17 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். கில் 2 ஓட்டங்களிலும் ஸ்ரேயாஸ் ஐயர் 31 ஓட்டங்களிலும் வெளியேறினர். 100 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்களை இழந்தது இந்தியா.

64 பந்துகளை எதிர்கொண்ட கோலி, 38 ஓட்டங்கள் எடுத்து விக்கெட்டை இழந்தார். தொடர்ந்து அஸ்வின், தாகூர், பும்ரா ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

மறுமுனையில் துடுப்பெடுத்தாடிய கே. எல். ராகுல் பொறுப்பாக ஆடினார். முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 105 பந்துகளை எதிர்கொண்ட அவர் 70 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 10 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கும். முதல் நாளில் 59 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 208 ஓட்டங்கள் எடுத்திருந்தது இந்தியா. மழை காரணமாக முதல் நாள் ஆட்டம் மேற்கொண்டு தொடர முடியாமல் நிறுத்தப்பட்டது.



இந்நிலையில், நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் தொடங்கியது. கே. எல். ராகுல் தனது பொறுப்பான ஆட்டத்தை தொடர, மறுமுனையில் இருந்த சிராஜ் சில ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்தார். இதன்பின் கே. எல். ராகுல் சதம் அடித்தார். 101 ஓட்டங்கள் எடுத்திருந்த கே. எல். ராகுல் கடைசி விக்கெட்டாக விழ, 67.4 ஓவர்களில் இந்திய அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 245 ஓட்டங்கள் எடுத்தது.

தென்னாபிரிக்க அணி சார்பில் அதிகபட்சமாக ரபாடா 5 விக்கெட், நந்த்ரே பர்கர் 3 விக்கெட்களை கைப்பற்றினர். (ஐ)

## வோர்ணர் புதிய மைல்கல்!



மெல்பர்ன், டிசெ. 28

பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 38 ஓட்டங்களை டேவிட் வோர்ணர் பெற்றார். இதன் மூலம் சர்வதேச போட்டிகளில் அவுஸ்திரேலிய அணிக்காக அதிக ஓட்டங்கள் பெற்ற இரண்டாவது வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

161 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய டேவிட் வோர்ணர் 6,932 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சமீபத்தில் தனது 20ஆவது ஒருநாள் சதத்தை நிறைவு செய்ததனால் தொடக்க வீரராக மொத்தம் 46 சதங்கள் அடித்துள்ளார். இந்த சதத்தின் மூலம் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்தார். தொடக்க வீரராக சச்சின் 45 சதங்கள் அடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

111 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வோர்ணர் 8,689 ஓட்டங்கள் அடித்துள்ளார். 1,024 பௌண்டரிகள் 69 சிக்ஸர்கள் அடித்துள்ளார். டெஸ்ட், ஒருநாள், ரி -20 போட்டிகளில் 18,518 ஓட்டங்கள் அடித்து அசத்தியுள்ளார். இதன்மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் அவுஸ்திரேலிய அணிக்காக அதிகபட்ச ஓட்டங்கள் அடித்தவர்கள் பட்டியலில் 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

முதல் இடத்தில் 27,368 (667 இன்னிங்ஸ்கள்) ஓட்டங்களுடன் றிக்கி பொண்டிங் முதலிடத்தில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோலி புதிய சாதனை



செஞ்சூரியன், டிசெ. 28

தென்னாபிரிக்கா - இந்தியா அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இந்த போட்டியில் விராட்கோலி 38 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதன்மூலம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் ராகுல் டிராவிட்டை கோலி முந்தினார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ராகுல் டிராவிட் 1,252 ஓட்டங்கள் (21 போட்டி) எடுத்து 3ஆவது இந்திய வீரராக இருந்தார். தற்போது விராட் கோலி 1274 ஓட்டங்கள் எடுத்து அவரை முந்தி 3ஆவது இடத்தை பிடித்தார். அவர் 3 சதங்கள், 4 அரை சதங்களுடன் இந்த ஓட்டங்களை அவர் எடுத்துள்ளார்.

இன்னும் 33 ஓட்டங்கள் எடுத்தால் சேவாக்கை பின்தள்ளி 2ஆவது இடத்தை கோலி பிடிப்பார். டெண்டுல்கர் 1,741 ஓட்டங்களுடன் முதல் இடத்திலும் சேவாக் 1306 ஓட்டங்களுடன் 2ஆவது இடத்திலும் உள்ளனர்.

## ஆஸி. வலுநிலை; பாகிஸ்தான் தடுமாற்றம்!

மெல்பர்ன், டிசெ. 28

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் 318 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது அவுஸ்திரேலிய அணி. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 194 ஓட்டங்களைப் பெற்று தடுமாறுகிறது.

அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் மெல்பர்ன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. முதல் நாள் ஆட்டம் முடிவில் அவுஸ்திரேலியா 66 ஓவரில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 187 ஓட்டங்கள் எடுத்திருந்தது. லபுஷான் 44 ஓட்டங்களுடனும் டிராவிட் ஹெட் 9 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.



நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால், அவுஸ்திரேலியா 318 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பாகிஸ்தான் தரப்பில் ஷாஹீன் ஷா அப்ரிடி, மிர் ஹம்சா, ஹசன் அலி ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். அமிர் ஜமால் 3 விக்கெட்களை சாய்த்தார்.

பின்னர் பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸை தொடங்கியது. தொடக்க வீரர்களாக அப்துல்லா ஷபீக்- இமாம் களமிறங்கினர். இந்த இணை வேகப்பந்து வீச்சை சிறப்பாக எதிர் கொண்டு விளையாடியது. இதனால் லயனை பந்து வீச பட் கம்மின்ஸ் அழைத்தார். அதற்கு பலன் கிடைக்கும் வகையில் இமாம் 10 ஓட்டங்களில் அவர் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து சபீக்குடன் அணித் தலைவர் மசூத் சேர்ந்து நேர்த்தியாக விளையாடினார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சபீக் அரைச்சதம் அடித்து அசத்தினார். இந்த இணை 2ஆவது விக்கெட்டுக்கு 90 ஓட்டங்கள் சேர்த்தது. சபீக் 62 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பாபர் அசாம் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க, அரைச்சதம் விளாசிய மசூத் 54 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சகீல் 9 ஓட்டங்களிலும் சல்மான் 5 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தார்.

இதனால் பாகிஸ்தான் அணி 170 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்து திணறியது. இதனையடுத்து ரிஸ்வான் மற்றும் ஜமால் இணைந்து பொறுமையாக விளையாடினர்.

இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்களை இழந்து 194 ஓட்டங்கள் எடுத்தது.

ரிஸ்வான் 29 ஓட்டங்களிலும் ஜமால் 2 ஓட்டங்களில் களத்தில் உள்ளனர். அவுஸ்திரேலிய தரப்பில் கம்மின்ஸ் 3 விக்கெட்களையும் நதன் லயன் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

# இந்திய கப்பல்களை குறிவைக்கும் யேமன் ஹவுதிகள்: சுயேஸ் கால்வாயில் ஈரானின் பிராந்திய வகிபாகம் !

## செங்கடலில் தொடரும் கப்பல் கடத்தல்களும், இஸ்ரேலை எதிர்க்கும் யேமன் ஹவுதி கிளர்ச்சி படைகள் பற்றிய ஓர் பார்வை

ஐங்கரன் விக்கினேஸ்வரா




ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி படையினர் கடந்த நான்கு வாரங்களாகவே செங்கடலைக் கடக்கும் 10 வணிக கப்பல்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தியுள்ளனர். பாலஸ்தீன காசா விவகாரத்தில் ஈரான் அளிக்கும் ஆதரவை தொடர்ந்தே ஹவுதி போராளிகள் இஸ்ரேல் மற்றும் செங்கடலில் வரும் கப்பல்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்துகிறார்கள் என அமெரிக்க உளவுத்துறை இப்போது தகவல் வெளியிட்டுள்ளது.

ஹவுதி செயல்பாட்டில் தங்களுக்குத் தொடர்பில்லை என்று ஈரான் கூறினாலும் கள நிலவரம் இதுவாகவே இருக்கிறது என்றும் அமெரிக்க உளவுத்துறை கூறியுள்ளது.

**இந்திய நடுக்கடலில் தாக்குதல் :**

இந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு அருகில் இஸ்ரேலுக்குச் சொந்தமான வணிகக் கப்பலின் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி






இருந்தன.

இந்திய பெருங்கடலில் மசகு எண்ணெய் ஏற்றிக் கொண்டு மங்களூருக்கு அருகே வந்து கொண்டிருந்த ‘எம்.வி செம்’ என்ற கப்பல் மீது தான் டிரோன் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

போர்பந்தரில் இருந்து 217 கடல் மைல் தொலைவில் வந்தபோது நடத்தப்பட்ட டிரோன் தாக்குதலில் கப்பலில் தீ பிடித்தது. கப்பலில் பற்றிய தீ அணைக்கப்பட்ட போதிலும் கப்பலின் இயக்கம் பாதிக்கப்பட்டதாக தகவல் வெளியானது. இந்த கப்பலில் பயணம் செய்த அனைத்து சிப்பந்திகளும் பத்திரமாக இருப்பதாகவும் கப்பலுக்கு உதவ அப்பகுதியில் உள்ள அனைத்து கப்பல்களையும் கடற்படை உசார் செய்து இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் இந்திய மசகு எண்ணெய் கப்பல் மீது நடுக்கடலில் தாக்குதல் நடத்தப்பட்டது குறித்தும் புதிய தகவல் வெளியாகி உள்ளது. இதன்படி கப்பலில் இருந்த 22 பேரில் 21 இந்தியர்கள் மற்றும் வியட்நாம் நாட்டை சேர்ந்த ஒருவரும் அடங்குவர். தாக்குதல் காரணமாக கப்பலில் உள்ள மின்சாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய கடற்படை தகவல் தெரிவித்துள்ளது.

**செங்கடலில் கப்பல் கடத்தல்:**

செங்கடல், எகிப்தின் சூயஸ் கால்வாயிலிருந்து அரேபிய தீபகற்பத்தை ஆபிரிக்காவில் இருந்து பிரிக்கும் நீரிணையாகும். இது உலகளாவிய கப்பல் மற்றும் எரிசக்தி விநியோகத்திற்கான முக்கிய வர்த்தக பாதையாக உள்ளது.

அதனால் தான் அக்டோபர் 7 ஆம் தேதி இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து பல கப்பல்களை கடலில் பயணஞ் செய்வதை நிறுத்தியுள்ளது.

மத்திய கிழக்குப் பகுதியில் இஸ்ரேல்-ஹமாஸ் போர் இன்னமும் தொடர்கிறது. அதேவேளை செங்கடல் பிராந்தியத்தில் அதிகரித்த பதட்டங்களால் சர்வதேச வணிக கப்பல் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

யேமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் கப்பல் வழித்தடத்தில் இஸ்ரேலுடன் தொடர்புபட்ட பல சரக்குக் கப்பல்களையும் கைப்பற்றி பல கடற் பணியாளர்களை பிணைக் கைதிகளாகக் கைப்பற்றி உள்ளனர்.

இதற்கிடையே லெபனான், ஈரான் உள்ளிட்ட நாடுகளில் இருக்கும் ஆயுத போராளிக் குழுக்களும் இஸ்ரேலுக்கு எதிரான தங்கள் நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளன.

**இஸ்ரேலுக்கு எதிரான ஹவுதி:**

இஸ்ரேலுக்கு எதிரான போரில் தாங்களும் களமிறங்கியுள்ளதாக யேமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சிக் குழு அண்மையில் அறிவித்துள்ளது.

சுனி இஸ்லாமிய நெறியை பின்பற்றும் யேமன் அரசிற்கு எதிராக 1992ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது தான் ஹவுதி ஆயுதக்குழு. அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் எதிராக இந்த இயக்கம் செயல்பட்டு வருகிறது.


யேமனில் வாழும் ஹவுதி பழங்குடியினரே இந்த அமைப்பில் பெரும்பாலும் உறுப்பினர்களாக உள்ளனர். ஷியா பிரிவு இஸ்லாமியர்களான ஹவுதிக்கள், சுனி பிரிவு இஸ்லாமியர்களை கொண்டு அமைந்த யேமன் நாட்டு அரசை எதிர்த்து நீண்டகாலமாக போராடி வருகின்றனர்.

அத்துடன் யேமனின் சிறு பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹவுதிக்கள் நாடு முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர போராடி வருகிறார்கள். ஹவுதிக்களுக்கு எதிராக யேமன் அரசு நடத்தும் சண்டைக்கு சவுதி அரேபியாவும் உதவி வருகிறது. இதன் காரணமாக சவுதி அரேபிய நகரங்களை கூட ஹவுதி ஆயுதக்குழுவி னர் அவ்வப்போது ஏவுகணைகளை வீசி தாக்குவது உண்டு.

ஷியா இஸ்லாமியர்கள் நிறைந்த ஈரானும் ஹவுதிக்களுக்கு ஆயுதம் மற்றும் நிதி உதவிகளை அளித்து வருவதாக தகவல்கள் உண்டு.

இந்த சூழலில்தான் இஸ்ரேலுக்கு எதிராகவும் தங்கள் போர் தொடங்கியுள்ளதாக ஹவுதிக்கள் அறிவித்துள்ளனர். ஹமாஸ் தவிர லெபனானிலிருந்து ஹிஸ்புல்லாக்கள், சிரியாவிலிருந்து ஈரான் ஆதரவு படைகள் இஸ்ரேலை தாக்கி வரும் நிலையில் ஹவுதிக்களும் தற்போது அதில் இணைந்து கொண்டுள்ளது.

இந்த போர் மேலும் தீவிரமடையுமா என்ற கவலையை உலக நாடுகளுக்கு ஏற்படுத்தியுள்ளது. யேமனிலிருந்து சவுதி அரேபியா என்ற பெரும் நிலப்பரப்பை கடந்து ஆயிரம் கிலோ மீட்டர்களுக்கு அப் பால் உள்ள இஸ்ரேல் மீது ஹவுதிக்கள் தாக்கியது கவனத்தை ஈர்த்துள்ளது.



**இந்தியாவின் மற்றோரு கப்பலும் கடத்தல்:**

நவம்பர் மாத ஆரம் பத்தில் இந்தியாவுக் குச் சென்று கொண்டி ருந்த சர்வதேச சரக்குக் கப்பலைப் யேமனில்






உள்ள ஹவுதி குழு பிடித்து வைத் துள்ளதாக இஸ்ரேல் முன்பு குற்றம் சாட்டியது. செங்க டலில் சென்று கொண்டிருந்த நிலையில், ஹெலிகாப் டர் மூலம் ஹவுதி படை தனது வீரர்களை அதில் இறக்கி, அதன் மூலம் கப்பலைக் கடத்திச் சென்றுள்ள னர்.

பிரிட்டன் நிறுவனத்திற்குச் சொந்தமான அந்த கப்பலை ஜப்பான் நிறுவனத்தால் இயக்கப்படுவதாக இஸ்ரேல் கூறுகிறது. அந்த கப்பலில் உக்ரைன், பல்கேரியன், பிலிப்பைன்ஸ் மற்றும் மெக்சிகோ என பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 25 பணியாளர்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது. அந்த சரக்கு கப்பலை ஹவுதி படை கடத்தியதை உறுதி செய்துள்ளனர்.

இது தொடர்பாக ஹவுதி படை முன்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் இஸ்ரேல் நிறுவனம் அல்லது இஸ்ரேல் கொடியுடன் இருக்கும் அனைத்து கப்பல்களையும் குறிவைத்துக் கடத்துவோம் என்று எச்சரித்திருந்தது. அதன்படி இந்த கடத்தப்பட்ட கப்பலும் இஸ்ரேலுக்கு சொந்தமானது தான் என்று ஹவுதி கூறியுள்ளது.

**ஈரான் மீது குற்றச்சாட்டு:**

2019 முதல், ஈரான் உலக வல்லரசுகளுடனான அணு சக்தி ஒப்பந்தத்தின் அனைத்து வரம்புகளையும் உடைக்கத் தொடங்கி உள்ளது. சர்வதேசக் கடலில் தொடர்ச்சியான கப்பல்கள் கடத்தலுக்கும், தாக்குதலுக்கும் ஈரான் மீதான குற்றச்சாட்டும் உள்ளது.

செங்கடல் கடற்பரப்பில் இஸ்ரேலிய கப்பல்களை குறிவைப்பதாக யேமன் ஹவுதிகள் பலமுறை மிரட்டல் விடுத்துள்ளனர். இத்தகைய தாக்குதல்கள் ஈரான் அரசு ஆதரிக்கின்றது என்றும், அதே போல் யேமனில் உள்ள ஹவுதிகளின் நிலைப்பாட்டை வலுப்படுத்துகின்றன என்றும் கூறப்படுகிறது.

ஹமாஸூக்கு ஆதரவாக எனச் சொல்லி ஹவுதி படை செங்கடல் பகுதியில் வரும் கப்பல்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கிடையே அமெரிக்க அரசு சில ரகசிய உளவுத் தகவல்களை பொது வெளியில் பகிர்ந்துள்ளது. அதில் செங்கடலில் செல்லும் வணிகக் கப்பல்களுக்கு எதிராக ஈரான் திட்டமிட்டு வருவதாக அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது.

செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீதான ஹவுதிக்களின் தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையின் பின்னால் இருப்பதே ஈரான் தான் என அமெரிக்க உளவு துறை திட்டவட்டமாக அறிவித்துள்ளமை, ஈரானை போர்ச் சூழலுக்குள் தள்ளும் புறச் சூழ்நிலைகளை உருவாக்கி உள்ளது.

கடந்த சில காலமாகவே மத்திய கிழக்குப் பகுதியில் பதற்றமான போர் சூழல் நிலவி வருகிறது. அங்கே இஸ்ரேல் ஹமாஸ் போர் தீவிரமாக நடந்து வருகிறது. இந்தப் போர் பிராந்திய போராக மாறுமோ என்றும் உலக நாடுகள் ஐயமுறுகின்றன.

# சுனாமிக்கு பிறகு பேரிடரை எதிர்கொள்வதில் இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கை நிலை என்ன?

ரஞ்சன் அருண் பிரசாத்




இலங்கை உள்ளிட்ட நாடுகளை சுனாமி பேரனர்த்தம் தாக்கி, 19 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

இதனை முன்னிட்டு நாட்டின் பல்வேறு பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் தேதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் பெலிஅத்த - பெரலிய பகுதியில் பயணிகளுடன் ரயிலொன்று முழுமையாக பாதிக்கப்பட்டது.

இந்த நிகழ்வை நினைவு கூறும் வகையில், கொழும்பு - மருதானை ரயில் நிலையத்திலிருந்து செவ்வாய் அதிகாலை 6.25க்கு விசேட ரயிலொன்று புறப்பட்டது.

2006ம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ரயிலின் 591 இலக்கத்துடனான எஞ்ஜின் இப்போது பயன்பாட்டில் உள்ளமை விசேட அம்சமாகும்.

இந்த ரயில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடைந்ததை அடுத்து, அங்கு ரயிலில் உயிர்நீத்த உறவுகளுக்காக ரயில்வே அதிகாரிகளினால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தனது பயணத்தை ஆரம்பித்த குறித்த ரயில் பெரெலிய சுனாமி நினைவு தூபிக்கு அருகில் 9.25க்கு சென்றடைந்ததுடன், அங்கு விசேட நினைவேந்தல் நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

அத்துடன், நாடு முழுவதும் 9.25 முதல் 9.27 வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

### சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்களுக்கு என்ன நேர்ந்துள்ளது?

இலங்கையை தாக்கிய சுனாமி அனர்த்தம் காரணமாக சுமார் 31,000 பேர் உயிரிழந்ததுடன், 4,000 பேர் வரை காணாமல் போயிருந்தனர்.

இந்த பேரனர்த்தம் காரணமாக இலங்கைக்கு 100 கோடி அமெரிக்க டாலர் நட்டம் ஏற்பட்டதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கை எதிர்கொண்ட பாரிய இயற்கை அனர்த்தமாக வரலாற்றில் இது பதிவாகியுள்ளது.

எதிர்காலத்தில் சுனாமி அனர்த்தம் ஏற்படும் பட்சத்தில், மக்களை உடன் வெளியேற்றும் நோக்கில் சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்களை நிர்மாணிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

எனினும், சுனாமி ஏற்பட்டு 19 வருடங்கள் ஆகின்ற இன்றைய தினத்தில் 77 கோபுரங்களில் 57 கோபுரங்கள் செயலிழந்துள்ளதாக தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ் பிபிசி வினவிய போது, இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கு ஏற்பட்ட சுனாமி காரணமாக இலங்கையின் 4ல் 3 பகுதியான கடற்பரப்பிற்கு பாதிப்பு ஏற்பட்டது.

இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டு, தற்போது செயற்பாட்டிலுள்ள சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்களில் 11 கோபுரங்கள், இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்திலிருந்து செயற்படுத்த முடியும் என அந்த நிலையத்தின் தகவல் வழங்கும் அதிகாரி எமது செய்திப் பிரிவிற்கு தெரிவித்தார்.

எஞ்சிய 9 கோபுரங்களும், அந்த கோபுரங்களுக்கு சென்றே செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறுகின்றார்.

எனினும், 57 கோபுரங்களை எந்தவிதத்திலும் செயற்படுத்த முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கோபுரங்கள் பல முறை புனரமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட போதிலும், இந்த கோபுரங்களை இயக்கும் செயற்கை கோள் காலாவதியாகி செயலிழந்துள்ளது.



குறித்த செயற்கை கோள் செயலிழந்துள்ளதுடன், அந்த செயற்கை கோளுக்கு சொந்தமான நிறுவனம், சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரத்திற்கான உபகரண உற்பத்திகளை கைவிட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இனி கரையோர மக்களை அப்புறப்படுத்துவது எப்படி?

இலங்கையில் தற்போது கையடக்கத் தொலைபேசி வழியாக அனர்த்தங்கள் தொடர்பான தகவல்களை வழங்கும் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.



மக்களை தெளிவூட்டும் வகையிலான வெற்றியளிக்கும் முறையொன்று இன்று முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக நிலையம் குறிப்பிடுகின்றது.

தொலைபேசி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டத்திற்கான உடன்படிக்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கையெழுத்திடப்பட்டது.

இயற்கை அனர்த்தம் ஒன்று ஏற்படும் பட்சத்தில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்களின் தொலைபேசிகளுக்கு ஒலிப்பதிவு செய்யப்பட்ட குரல் வடிவிலாக குறுந்தகவலொன்று அனுப்பி வைக்கப்படும்.

இதன் முதற்கட்டமாக 14 மாவட்டங்களில் 60 ஆயிரம் நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசிகளுக்கு இந்த தகவல் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் நாட்களில் நாடு முழுவதும் இந்த நடவடிக்கை விஸ்தரிக்கப்படவுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

சுனாமி மாத்திரமன்றி, எந்தவொரு இயற்கை அனர்த்தங்கள் தொடர்பிலும் இந்த முறையின் ஊடாக அறிவிக்கப்படும் என நிலையம் குறிப்பிட்டுள்ளது.



இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் பிபிசிக்கு அனுப்பியுள்ள தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழாக பதில் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கை உள்ளிட்ட எந்தவொரு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் போதும் முன்னெச்சரிக்கைகளை விடுக்கும் வகையிலான தொழில்நுட்ப உபகரணங்களை ஸ்தாபிக்கும் முதற்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும், நாடு எதிர்நோக்கியுள்ள நிதி பற்றாக்குறை காரணமாக அதனை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது” என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிடுகின்றது.

அத்துடன், “சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்களின் செயற்பாடு தொடர்பில் எதிர்காலத்தில் நிபுணர்களின் பரிந்துரைகளின் ஊடாக குறித்த செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்” எனவும் அந்த பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கை நிலை என்ன?

இலங்கையின் அயல் நாடான இந்தியா, இயற்கை அனர்த்தங்களின் போது மக்களை தெளிவூட்டும் வகையில் எஸ்.எம்.எஸ் தகவல்கள், வானொலி, தொலைகாட்சி மூலமாக அறிவிப்புகள், ஒலிபெருக்கி மூலமாக அறிவிப்புக்கள் உள்ளிட்ட பல முறைகளை பயன்படுத்தி வருகின்றது.

அத்துடன், இந்து மகா சமுத்திரத்திலுள்ள பல நாடுகள் இந்த முறைகளை பயன்படுத்தி வருகின்றன.

அமெரிக்கா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளும் இவ்வாறான பல முறைகளை பயன்படுத்தி வருகின்றன.

பல இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளும் காலத்தையே, உலகிலுள்ள நாடுகள் தற்போது கடந்து செல்கின்றன.

சுனாமி ஏற்பட்டு இன்றுடன் 19 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

அப்படியென்றால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றுமொரு சுனாமி அனர்த்தம் ஏற்படும் வரை காத்திருக்காது, அவசர நிலைமைகளின் போது உரிய மற்றும் சரியான முறையில் மிக துரித கதியில் நம்பகரமான தகவல்களை வழங்கி மக்களை பாதுகாக்கும் நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துவது அவசியமானது.



இலங்கையில் தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்களை நம்பியிருக்காது, புதிய தொழில்நுட்ப முறைகளை நோக்கி நகர்ந்து, மக்களின் உயிர்களை பாதுகாக்கும் இயலுமை எந்தளவிற்கு உள்ளது என்பது கேள்வியாகவே உள்ளது.

மற்றுமொரு சுனாமி ஏற்படும் வரை காத்திருக்காது, இந்த தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, மக்களின் உயிரை பாதுக்க வேண்டும் என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. ●



# திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் நேற்று நள்ளிரவில் நடேசர் அபிசேகம்

## காலையில் திருவாதிரை தீர்த்தம்

காரைதீவு, டிசெ. 28

திருக்கோவில் விநாயகபுரம் திருநாவுக்கரசு நாயனார் குரு குலத்தில் வருடாந்த திருவெம்பாவை உற்சவத்தின் திருவாதிரை தீர்த்தம் நேற்று புதன்கிழமை காலை 6.15 மணியளவில் பக்திப்பரவசத்துடன் சிறப்பாக நடைபெற்றது.

குருகுலப்பணிப்பாளர் கண இராஜரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நள்ளிரவில் ஆருத்ரா அபிஷேகம் இடம்பெற்றது.

அதிகாலையில் ஆருத்ரா தரிசனமும் அதனை அதனைத் தொடர்ந்து குருகுலத்தின் தீர்த்தக் கிணற்றில் தீர்த்த உற்சவம் இனிதே நிறைவேறியது.

கௌரி அம்மன் ஆலய பிரதம குரு. நிலோஜன் ஐயா கிரியைகளை நடத்தினார் .

அதனைத் தொடர்ந்து திரு



வம்பாவை பூசையில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இல்ல செயலாளர் பா.சந்திரேஸ்வரன் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டனர். (அ)

# இரத்மலானை ரயில்வே தொழிற்சாலையில் கொள்ளையிட முயன்ற மூன்று பேர்மீது சூடு

கொழும்பு, டிசெ. 28

இரத்மலானை பிரதேசத்தில் உள்ள ரயில்வே திணைக்களத்திற்கு சொந்தமான தொழிற்சாலையில் கொள்ளையிட முயன்ற மூவர் மீது ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் மற்றைய இரண்டு சந்தேக நபர்களும் தப்பிச்சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர். இந்த சம்பவத்தின்போது கொள்ளையர்கள் ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை கூரிய ஆயுதத்தால் தாக்கினரென விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை இரத்மலானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மாதகல் கடற்கரையில் சுனாமி நினைவேந்தல்



யாழ்ப்பாணம், டிசெ. 28

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் கடற்கோள் நினைவுநாள் நிகழ்ச்சி நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாதகல் கடற்கரையில் உணர்வு பூர்வமாக இடம்பெற்றுள்ளது. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் ம.கஜேந்திரன், பொருளாளர் க.கேதீஸ்வரநாதன், கலை-பண்பாட்டு பிரிவின் துணைச் செயலாளர் கை. சரவணன், வட மாகாண கடற்றொழிலாளர்கள் இணையத்தின் தலைவர் வி.சுப்பிரமணியம், எந்திரி ச.சர்வராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். கடற்கோளில் பலியானவர்களுக்குக் கடலில் மலர் தூவி ஆரம்பமான இந்நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தார்கள்.

இந்தோனேசியா, சுமத்திரா தீவுக்கு அருகே கடலின் அடியில் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி நிகழ்ந்த பூகம்பத்தால் ஏற்பட்ட கடற்கோள் இந்து சமுத்திரக் கரையோர நாடுகளில் இரண்டே கால் இலட்சத்துக்கும் அதிகமானோர்களைப் பலியெடுத்தது. இலங்கையிலும் முப்பத்தையாயிரத்துக்கும் மேலானோர் பலியானார்கள். பலகோடி ரூபாய் சொத்து அழிவுகள் ஏற்பட்டன. இலங்கையின் வரலாற்றில் தீராத வலியை ஏற்படுத்திச் சென்ற இந்நாளை இலங்கை அரசாங்கம் தேசிய பாதுகாப்பு தினமாகக் கொண்டாடி வருகிறது. வடக்கு மாகாண சபை இந்நாளை இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கமும் ஆண்டுதோறும் கடற்கோள் நினைவுநாளை இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினமாகக் கடைப்பிடித்து வருகிறது. இதற்கு அமைவாக, மாதகல் விநாயகர் இறங்குதுறையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கடற்சூழலின் முக்கியத்துவம், அவற்றின் பாதுகாப்பு, இயற்கைப் பேரிடர்களைத் தணிவிக்கும் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வுரைகள் இடம்பெற்றதோடு, நிகழ்ச்சியின் இறுதியில் அனைவரும் மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தியிமிருந்தனர். பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தினூடாகக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

